பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir


விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 14, வியாழக்கிழமை 29.12.2016 | கதிர் 54

## விமல் வீரவன்ஸ விசாரணைக்கு வருகை தந்தார்

கொழும்பு, டிசெ.29
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகியுள்ளார்.
கடந்த ஆட்சிக்காலத்தில் அரச வாகனங்களை முறைகேடாகப் பக்கம் 20 >>>

# அரசமைப்பு குழுவிலிருந்து வெளியேறி அரசுடன் முதலில் நேரடியாக பேசுங்கள்!

### சம்பந்தன், சுமந்திரனை வலியுறுத்துகின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சுரேஷ் பிரேமசந்திரன்



**யாழ்ப்பாணம், டிசெம்பர் 29**
**அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான இரா.சம்பந்தரும், எம்.ஏ.சுமந்திரனும் வெளியேற வேண்டும். அதற்குப் பின்னர் தமிழர்களுடைய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடிப்படைகள் குறித்து ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசுத் தரப்புடன் நேரில் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த அடிப்படைகளோடு அரசமைப்புக் குழுவுக்குப் போய் அவை அரசமைப்பில் இடம்பெறுவதை உறுதிசெய்ய வேண்டும்.**
**-இவ்வாறுகோரியிருக்கிறார்கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.**

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழர்களின் அடிப்படை கோரிக்கைகளான சமஷ்டி, வடக்கு – கிழக்கு இணைப்பு ஆகியனவழங்கப்படமாட்டாதுஎன்று அரசுத் தலைமையும் தென்னிலங்கையின் பிரதான தரப்புக்களும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்த பின்னர் அரசமைப்புக்குழுவில்சம்பந்தரும், சுமந்திரனும் இருந்து என்ன வெட்டிப் பிடுங்கப் போகிறார்கள் என்ற சாரப்பட அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-பக்கம் 19 >>>

## கனடாவில் கோர விபத்தில் இரு இலங்கைத் தமிழர் பலி


அதீஷ் சதீஸ்

கனடாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கோர விபத்தில் இலங்கைத் தமிழர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கனடா பிக்கறிங்கில் ரோன்ரன் வீதியும் அல்ரோனா வீதியும் சந்திக்கும் பகுதியில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதுண்டதால் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தஇளைஞர்கள்பயணித்த வாகனங்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதில் நேருக்கு நேர் மோதுண்ட வாகனத்தில் இருந்த இரண்டு ஈழத் தமிழர்கள் சம்பவ பக்கம் 20 >>>

## நெல்லியடியில் கஞ்சா மீட்பு!

நெல்லியடி, டிசெ.29
மன்னாருக்குக் கடத்தப்படவிருந்த ஒரு கிலோ கேரளக் கஞ் சாவுடன் இளைஞர் ஒருவர் வடமராட்சி மாலுசந்திப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.
கஞ்சா கடத்தப்படுகின்றது பக்கம் 20 >>>



## முன்னாள் பிரதமரின் மறைவுக்கு தேசிய துக்க தினம் கிடையாது

கொழும்பு, டிசெ.29
மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இறுதிச் சடங்கு அரச மரியாதையுடன் நடத்தப்படும். ஆனால் அதற்காகத் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படமாட்டாது.
அவரது இறுதிக் கிரியைகள் பக்கம் 20 >>>

## சர்வதேச அழுத்தங்களிலிருந்து மீளவே தமிழ்க் கூட்டமைப்புடன் அரசு கைகோப்பு!

### விடயத்தைப் போட்டுடைக்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, டிசெ.29
சர்வதேச அழுத்தங்களில் இருந்து மீளும் நோக்கிலேயே தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கு அரசு தீர்மானித்தது என ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ^ம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப் பக்கம் 20 >>>

### அளப்பு அருணாசலம்



அப்ப...போராட்டம் நடத்த பொதுவா ஒரு இடம் ஒதுக்கினால் நல்லது பாருங்கோ...!

## போதைப் பொருளுடன் வவுனியாவில் நேற்று ஒருவர் கைது!

வவுனியா, டிசெ.29
வவுனியாவில் நேற்று 3கிலோ 491கிராம் 'மாவா' போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வவுனியா பொலிஸாருக்குக் பக்கம் 20 >>>

## அரசமைப்புக் குறித்து ஜனாதிபதியுடன் நேரில் பேச அஸ்கிரிய பீடாதிபதி முடிவு!

கொழும்பு, டிசெ.29
புதிய அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் காணப்படும் நாட்டுக்கு ஒவ்வாத நிலைமைகள் சம்பந்தமாகத் தாம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தித் தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளார் என அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வண. வராகொட சிறீஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.
உருவாக்கப்படும் புதிய அரசமைப்புத்தொடர்பில்நாட்டுமக்களிடம் போதுமான புரிதல் காணப்படவில்லை எனவும் பக்கம் 20 >>>

### நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த போராட்டங்கள்



## தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநர் செயலகம் முன்பாக...!

நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுக் காலை வடமாகாண ஆளுநர் செயலகத்தின் முன்பாக உணவு தவிர்ப்புப் பக்கம் 20 >>>

## புதிய அதிபர்கள் கல்வி அமைச்சின் முன்பாக...!

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 3 அதிபர்கள் யாழ். செம்மணி வீதியில் உள்ள வட பக்கம் 20 >>>



*'சசிகலாக்கள்' மோதல் உச்சக் கட்டத்தில்*

# அ.தி.மு.க. தலைமையகத்தில் அடிதடி சண்டித்தனம்; ஒருவர் மூக்குடைந்தது; மற்றவர் மண்டை பிளந்தது!!

சென்னை, டிசெ.29

அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு வந்த அ.தி.மு.க கட்சியில் இருந்து நீக்கப்பட்ட ராஜ்ய சபா எம்.பியான சசிகலா புஷ்பாவின் கணவரையும், வழக்கறிஞரையும், போயஸ் கார்டன் சசிகலாவின் ஆதரவாளர்கள் கடுமையாகத் தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் சசிகலா புஷ்பாவின் கணவர் லிங்கேஸ்வர திலகன் கொடூரமான முறையில்தாக்கப் பட்டமையால், முகம் முழுவதும் இரத்தம் வழிந்த நிலையில் பொலிஸாரால் மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப் பட்டார்.

அ.தி.மு.க.பொதுக்குழு இன்று சென்னையில் கூடுகிறது. இப்பொதுக் குழுக் கூட்டத்தில் போயஸ் கார்டன் சசிகலா அ.தி.மு.கபொதுச்செயலராகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று கூறப்பட்டு வந்தது.


ஆனால், சசிகலாவுக்குக்கட்சியில்கடும்எதிர்ப்புஎழுந்துள்ளது. சசிகலாவை எதிர்த்து சசிகலா புஷ்பா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.


இதனிடையே அ.தி.மு.க. பொதுச்செயலர் பதவிக்குப் போட்டியிடுவதற்கு மனு வாங்குவதற்காக கட்சித்தலைமை அலுவலகத்துக்கு சசிகலா புஷ்பா வரப்போகின்றார் என நேற்றுப் பிற்பகல் தகவல் பரவியது.

இதையடுத்து வளர்மதி, கோகுல இந்திரா உள்ளிட்டோர் தமது ஆதரவாளர்களுடன் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்கு வந்து காத்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் சசிகலா புஷ்பாவின் வழக்கறிஞரும், அவரது கணவர்லிங்கேஸ்வரதிலகனும் அ.தி.மு.க. தலைமை அலுவலகத்துக்குள் வந்தனர் எனவும், அவர்களை அடையாளம் கண்டு கொண்ட சசிகலாவின் ஆதரவாளர்கள் கும்பல் அவர்களைச் சூழ்ந்து கொண்டு அடித்து உதைத்தனர் எனவும் கூறப்படுகிறது.

இதில் லிங்கேஸ்வர திலகனுக்கு மூக்கு உடைந்து இரத்தம் கொட்டியது. அவரைப் பொலிஸார் உடனடியாக மீட்டு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றனர். இதன் காரணமாக அப் பகுதியில் ஏராளமான பொலி ஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (உ)





## ரயிலில் குண்டுப் புரளிக்கு காரணம் காதல் விவகாரம்!

கொழும்பு, டிசெ.29

கோட்டை ரயில் நிலையத்தில் கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணிக்கவிருந்த இரவுத்தபால்ரயிலில்குண்டுவைக் கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து கடந்த திங்கட்கிழமை தீவிர சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பின் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதன் காரணமாகவே இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இளம் பெண் ஒருவரே பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு குண்டு வைக்கப்பட்டுள்ளது என்ற தகவலைத் தெரிவித்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

காதல் சம்பவம் ஒன்றின் காரணமாகவே இந்த வதந்தி பரப்பப்பட்டுள்ளது என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாம்.

இந்த ரயிலில் தனது காதலன் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்காக ஊருக்குச் செல்கின்றார் எனவும், அதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்தப் பெண் இவ்வாறு குண்டு வைக்கப்பட்டுள்ளது எனப் பொய்யானதகவலைத்தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு பொலிஸாருக்குக் கூறியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ)

## வடமேல் மாகாண சபையாலும் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ.29

அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்ட மூலம் நேற்று வடமேல் மாகாண சபையிலும் பெரும்பான்மைவாக்குகளால்நிராகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சட்டமூலம்தொடர்பான வாக்கெடுப்பு வடமேல் மாகாண சபையில்நேற்று இடம்பெற்றது. இதன்போது சட்டமூலத்துக்கு ஆதரவாக 11 வாக்குகளும் எதிராக 31 வாக்குகளும் அளிக்கப் பட்டன. 20 மேலதிக வாக்குகளால் அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் நிராகரிக்கப்பட்டன.

வடமேல்மாகாண முதலமைச்சர் தர்மசிறி தஸநாயக்க உள்ளிட்டவர்கள் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

(இந்தச் சட்டமூலம் மத்திய மாகாண சபையில் நிராகரிக்கப் பட்டமை தொடர்பான செய்தி 7ஆம் பக்கத்தில்...)


## உள்ளூராட்சி மாத நிறைவுநாள் நிகழ்வு

நாவற்குழி, டிசெ.29

சாவகச்சேரிப் பிரதேசசபையின் உள்ளூராட்சி மாத நிறைவு நாள் நிகழ்வு இன்று வியாழன் காலை 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் திருமதி மு.கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக, கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை வைத்தியதிகாரி ப.அச்சுதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாகசாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன், சாவகச்சேரி இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி. செந்தீஸ்வரி செந்தூரன் சாவகச்சேரி மக்கள்வங்கி முகாமையாளர் க.விஜயகுமார், சாவகச்சேரி ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் சி.சுரேந்திரகுமார், சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி முகாமையாளர் திருமதி துஷ்யந்தினி குருபரராஜா மற்றும்தென்மராட்சிகிழக்கு ப.நோ.கூ.சங்க தலைவர் செ.அமரசேகரம் உட்படப் பலர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் உள்ளூராட்சி மாதத்தையொட்டி பிரதேசசபை உப அலுவலக நூலகங்களினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கானபரிசில் வழங்கல், கச்சாய் கடற் பகுதியில் நடைபெற்ற கடற்பகுதி விளையாட்டுக்களில் பங்குபற்றிவெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கல், கௌரவிப்புக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (உ-22)



## ஆடம்பர ஹோட்டலில் விருந்துபசாரம் அவசியமா என அனந்தி கேள்வி!

யாழ்ப்பாணம், டிசெ.29

"வடக்கு மாகாண சபை ஏழை மக்களுக்குரிய தேவைகளை நிறைவேற்றவேண்டுமேயொழிய மக்களின் பணத்தில் ஆடம்பர ஹோட்டல்களில் விருந்துபசாரங்களை ஒழுங்குபடுத்தி, சிக்கனத்தைக் கடைப்பிடிக்காமல் வீண்செலவுகளை மேற்கொள்வது பொருத்தமற்றதாகத் தெரிகின்றது" – என்று அனந்திசசிதரன்அவைத்தலைவர் சிவஞானத்தை நோக்கித் தெரிவித்தார்.

இவ்வருடத்தின் நிறைவு அமர்வுநேற்றுவடக்கு மாகாண சபை மண்டபத்தில் நடைபெற்றது. அப்பொழுது, நேற்று ஹோட்டல் ஒன்றில் பேரவைச் செயலகத்தால்ஒழுங்குசெய்யப் பட்டிருந்தமதியபோசனவிருந்து வைபவத்தைச் சுட்டிக்காட்டியே அனந்தி அவ்வாறு கூறினார்.

அதற்குப்பதிலளித்த அவைத் தலைவர் சிவஞானம், "நாம் சிக்கனமாகவே விருந்துபசாரத்தை ஒழுங்கு செய்திருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு சிக்கனமுறைமைகள் நன்றாகவே தெரியும். அந்த ஹோட்டலில்விருந்துநடைபெறவுள்ள மண்டபத்துக்கான வாடகைஎம்மிடத்து அறவிடப்பட மாட்டாது. அத்துடன் விருந்தில் பரிமாறப்படும் மதிய போசனமும் தரமும், சுவையும் குறையாமல் – அதேவேளை, வழமையாக வாடிக்கையாளரிடம் அறவிடும் விலையிலும் பாதி விலையிலே – எமக்கு வழங்க ஹோட்டல்நிர்வாகம் இணங்கியுள்ளது. அவ்வாறான ஒரு சிக்கன முறைமையை நாங்கள் கடைப்பிடிக்கக் கூடிய வகையிலேயே வருடாந்த ஒன்று கூடலும், மதிய போசன விருந்துபசாரமும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன." – என்றார்.

எனினும், பின்னர் ஆடம்பர ஹோட்டலில்நடைபெற்றவிருந்துபசாரத்தில் அனந்தி சசிதரனும் பங்குபற்றினார். (உ)

## யூ.எஸ்.ஹோட்டலில் ஒற்றுமையாக கூடியிருப்பது முதல்வருக்கு மகிழ்ச்சி!

"இந்த 'யூ.எஸ்.ஹோட்டல்' கன கதைகளோடு தொடர்புள்ளதாகும். இங்குதான் பல விடயங்கள் நடந்துள்ளன. குறிப்பிட்ட சாரார் இங்கு கூடிக் கூடிக் கதைத்ததெல்லாம் அவ்வப்போது தெளிவாகவும் நன்றாகும் எனது செவிகளுக்கு வந்து சேரும். எல்லாம்நான் அறிந்து வைத்துள்ளேன். எனினும் இங்கு நாங்கள் இப்பொழுது ஒன்றாக வருடாந்த ஒன்றுகூடல் மதிய போசனத்துக்காக மகிழ்ச்சியோடுகூடியுள்ளோம். இவ்வாறு ஒன்றாகக் கூடியிருக்கும் சந்தர்ப் பத்தை ஏதோ இங்கே யூ.எஸ். ஹோட்டலிலே இறைவன் ஏற்படுத்தியுள்ளார் என்பதை நினைக்கவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இறைவனுக்கு நன்றி. இந்த மகிழ்ச்சியும் ஒற்று மையும் நீடித்து நிலைக்க வேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன், நேற்று மதியம் யாழ்ப்பாணம் நகரிலுள்ள யூ.எஸ். ஹோட்டலில் இடம்பெற்ற மதிய போசன விருந்துபசார வைபவத்தின் ஆரம்ப உரையில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் பேரவைச்செயலகமும்வடக்கு மாகாண முதலமைச்சு செயலகமும் இணைந்து யாழ். யூ.எஸ்.ஹோட்டலில் வருடாந்த ஒன்றுகூடல் மற்றும் மதிய போசன விருந்துபசாரம் ஆகியவற்றை ஒழுங்கு செய்திருந்தன.

முதலமைச்சர், பேரவைத் தலைவர், மாகாண அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் ஆகியோருடன் ஊடகவியலாளர்களும் ஒன்றுகூடல் மதியபோசனம் ஆகியவற்றில்கலந்துகொண்டிருந்தனர்.

ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த முதலமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"மக்களுக்காகவே நாங்கள்; நாங்கள் செய்யும் ஒவ்வொன்றும் மக்களுக்காவே; மக்களிடம் ஏராளமான எதிர்பார்ப்புக்கள் உள்ளன. ஏராளமான தேவைகளை அவர்களுக்காக நாங்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும். புது வருடம் வருகிறது. மக்களது தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றதிட சங்கற்பம் எடுப்போம். உங்கள் அனைவருக்கும்புதியவருடத்துக்கான வாழ்த்துக்கள். இறை வனின் ஆசியும் அருளும் எமக் குக் கிடைக்கும். அடுத்த வருடம் மிக நன்றாகவே அமையும் என்று உறுதியாக நம்புகின்றேன்." – என்றார் முதல்வர்.

அண்மைக்காலமாக முதல்வருக்கு எதிரான ஆளும் கட்சி உறுப்பினர்கள் குழாம் இதே யூ.எஸ். ஹோட்டலில் கூட்டம் கூடித்தான் திட்டங்கள், வியூகங்கள் வகுத்து வருவதாக முன்னர் வந்த செய்தியையே முதல்வர் தொட்டுக்காட்டிப்பேசினார் என்று கூறப்பட்டது. (உ)

# என்ன முட்டுக்கட்டை வந்தாலும் பொருத்து வீடுகள் அமைக்கப்படும்

## அமைச்சர் சுவாமிநாதன் திட்டவட்டம்

கிளிநொச்சி, டிசெ.29

என்ன முட்டுக்கட்டை வந்தாலும் பொருத்து வீடு நடைமுறைப்படுத் தப்படும் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் தெரிவித்தார்.

கடந்த செம்ரெம்பர் மாதம் கிளிநொச்சி பொதுச் சந்தை தீயினால் எரிந்த வியாபாரிகளுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உண்மையாக இப்பொழுது பல பிரச்சினைகள் இருக்கின்றன. மண் இல்லை; வேலைகளைச் செய்வதற்கான மேசன்மார்கள் இல்லை. இவ்வாறு பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதனால் நான் பிரதமருடன் பேசி முன் அமைக்கப்பட்ட ஒரு தொகை வீடுகளை நிர்மாணிப்பதற்கு முன் வந்திருக்கின்றேன். அந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் ஒரு வீட்டை நான் சுன்னாகத்திலே கட்டி இருக்கின்றேன். இந்த வீட்டை எத்தனையோ பேர் சென்று பார்வையிட்டு இருக்கின்றனர். ஆனாலும் இவற்றுக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்குப் பலர் இருக்கின்றனர். அதனைப்பற்றி இச்சந்தர்ப்பத்தில் பேச விரும்பவில்லை. எனினும் இத்திட்டம் முற்றுமுழுதாக மக்கள் நலம் சார்ந்ததே. ஆகவே இத்திட்டம் விரைவில் அமுல்படுத் தப்படும்.- என்றார்.

இதேவேளை - நேற்று வவுனியாவில் ஒரு நிகழ்வில் பங்குகொண்ட அமைச்சர் மக்களுக்கு பொருத்து வீடுகள் வேண்டும் என்றால் அவர்களது விருப்பப்படி நாம் அந்த வீடுகளை அவர்களுக்கு வழங்குவோம் என்று கூறினார்.

வவுனியா, கற்பகபுரம் பகுதியில் மக்களுக்கு காணிப்பத்திரங்கள் வழங்கிய போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு அபிவிருத்தி தொடர்பில் வடமாகாண சபையுடன் பேசவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இது தொடர்பில் தங்களின் பதில் என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது -

''வடமாகாண சபையுடன் எந்தப் பிரச்சினையும் இல்லை. வடமாகாணசபைக்குச் செய்ய வேண்டிய சலுகைகள் எல்லாம் கூறியிருக்கின்றோம். அவர்களுக்கு ஏதாவது தேவை என்றால் விவரத்தை நேரடியாக என்னுடைய அமைச்சுக்கு அனுப்பலாம். அவர்களது கோரிக்கைகள் எல்லாவற்றையும் நாங்கள் நிறைவேற்றுவதற்கு முன்வந்துள்ளோம். அவர்களுக்கு வேறு கோரிக்கைகள் இருந்தால் அவற்றை எங்களிடம் முன்வைக்கலாம். அந்தக் கோரிக்கையின்படி நான் நடப்பேன் எனக் கூறுகின்றேன்'' - என்றார்.

பொருத்து வீடுகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் நிலையில் தாங்கள் அதனை நடைமுறைப்படுத்த முயல்வது ஏன் என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பிய போது -

அரசாங்கம் - அதாவது ஜனாதிபதி - கூறியது என்னவென்றால் மக்களுடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு அந்த மக்களுக்கு வீடுகள் வேண்டும் என்றால் அதை நாம் கொடுப்போம் என்பதே. அதன்படிதான் செய்கின்றோம். அரசியல் தீர்ப்பை நான் கொண்டுவரவில்லை. அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் நான் கதைக்க விரும்பவில்லை. நாங்கள் செய்ய வேண்டிய கடமையைத் தான் செய்து கொண்டு வருகின்றோம் - எனத் தெரிவித்தார்.

( மேலும் செய்திகள் 16 ஆம் பக்கத்தில் )

# இராணுவ அம்புலன்ஸ் மோதியதில் வற்றாப்பளையில் குடும்பஸ்தர் சாவு





முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினரின் அம்புலன்ஸ் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துக் குறித்து மேலும் தெரியவருவதாவது :-

நேற்றுக்காலை முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியிலிருந்து முள்ளியவளைநோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வயோதிபர் மீது பின்னால் வந்த கேப்பாபுலவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ நோயாளர் காவுவண்டி மோதியதாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது

விபத்தில் வயோதிபரான குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.பலியானவர் கேப்பாபுலவைச் சேர்ந்த ஆறுபிள்ளைகளின் தந்தையான சூரிப்பிள்ளை கந்தப்பிள்ளை (வயது-75) ஆவார்.

விபத்து இடம்பெற்ற பகுதியில் சற்றுநேரம் பதற்றமான சூழல் காணப்பட்டது என்று விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து இராணுவ நோயாளர்காவு வண்டி உடனடியாக இராணுவத்தினரால் அகற்றப்பட்டதால் மக்கள் குழப்பமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மக்களுடன் கலந்துரையாடி விபத்து தொடர்பில் நீதியான விசாரணைகள் இடம்பெறும் என உறுதியளித்த பின்னரே சடலம் அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.(இ-81)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரி விபத்துப் பிரிவின் 3 மாடிக் கட்டடப் பணிகள் நிறைவு

சாவகச்சேரி, டிசெ.29

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வந்த விபத்து அவசரசிகிச்சைப் பிரிவின் மூன்று மாடிக் கட்டடவேலைகள் நிறைவு பெற்றுள்ளன.

இந்தக் கட்டடம் 2015 ஆம் ஆண்டுக்கான மாகாணசுகாதாரஅமைச்சின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி வைத்தியசாலையில் அதிதீவிர விபத்து சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டால் சாவகச்சேரியில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குஅனுப்பப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது விபத்தில் சிக்கி காயமடையும் நோயாளர்கள் சாவகச்சேரிவைத்தியசாலையில் இருந்து உடனடியாக நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் ஏனைய அலங்கரிப்பு, மின் இணைப்பு, இயந்திரங்கள் பொருத்துதல் போன்ற பணிகள் விரைவில் நிறைவடையும் என்றும் அதைஅடுத்து அந்தப் பிரிவு செயற்படத் தொடங்கிவிடும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-21)

## யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் 'தேடல்' வெளியீடு

யாழ்ப்பாணம் ,டிசெ.29

யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டம் நடத்தும் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிடலும் 'தேடல்' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும்.

தொல்பொருள் சின்னங்களைப் பார்வையிடும் நிகழ்வு தொல்லியல் அருங்காட்சியகத்திலும் சஞ்சிகை வெளியீடு கைலாசபதி கலையரங்கிலும் இடம்பெறும்.

தொல்லியல் ஆய்வு வட்டத் தலைவர் பொ. வருண்ராஜ் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், கௌரவ விருந்தினர்களாகக் கலைப்பீடப் பதில் பீடாதிபதி கலாநிதி க.சுதாகர், வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா, தொல்லியல் இணைப்பாளர் சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

## உரிமை கோராத மோ.சைக்கிள்,சைக்கிள் பருத்தித்துறை நீதிமன்றில்

வடமராட்சி,டிசெ.29

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள ஒரு மோட்டார் சைக்கிளையும், சைக்கிளையும் உரியவர்கள் உரிமை கோரிப் பெற்றுக் கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளனர்.

வெவ்வேறு இடங்களில் அநாதரவாக விடப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும், சைக்கிளையும் பருத்தித்துறைப் பொலிஸார் கைப்பற்றி இருந்தனர். இவற்றை எவரும் உரிமை கோராத நிலையில் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைத்திருந்தனர்.

என்.பி.எம்.ஓ.0416 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள், 55547 393 இலக்கமுடைய சைக்கிள் என்பனவே நீதிமன்றத்தில் உள்ளன.

இவற்றின் உரிமையாளர்கள் ஆதாரங்கள், ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். இல்லையேல் 6 மாதங்களின் பின்னர் இவை அரசுடைமையாக்கப்படுமென பதிவாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முஸ்லிம்களுடன் இணக்க அரசியல்

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம் மக்கள் உணர்வோடும், இணக்கத்தோடும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த தலைவர்களுள் ஒருவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா.

கிழக்கு முஸ்லிம்கள் செறிந்து வாழும் கல்முனையில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார் அவர்.

வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் நாட்டில் 18 ஆண்டுகள் அது நடைமுறையில் இருந்தது என்பதை மாவை சேனாதிராசா தமது உரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இணைப்பு விடயத்தில் அதுதான் முஸ்லிம்களின் சிக்கலும் கூட. அதைக் கூட்டமைப்புத் தலைமைகள் உணர வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தம்மீது திணிக்கப்பட்ட ஒன்றாகவே முஸ்லிம்கள் கருதுகின்றார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைப் பொறுத்தவரை தமிழர்கள் பலரின் நிலைப்பாடும் கூட அதுதான். இவ்விடயத்தில் முஸ்லிம்களின் நிலைப்பாடு இன்னும் வித்தியாசமானது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமது இசைவுடன் வரவில்லை, தம் மீது அது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது என்ற கருத்து நிலைப்பாடு தமிழர் தரப்பில் இருந்தாலும் கூட -

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முகிழ்ந்த காலகட்டத்தில், பல தமிழர் தரப்புகளுடனும், இயக்கங்களுடனும், அமைப்புக்களுடனும் இந்த விடயத்தை ஒட்டியோ அல்லது இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்தோ இலங்கை அரசும், இந்தியத் தரப்பும் தொடர்ந்து பேசி, தொடர்பாடல் கொண்டு, ஊடாடி, கருத்துப் பகிர்வையாவது முன்னெடுத்து வந்தன. அதன் தொடராகவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் கட்டவிழ்ந்தது.

ஆனால், அவ்வேளையில் முஸ்லிம்கள் தனித்து ஒரு தேசிய இனமாகவோ, ஒரு இனக்குழுமமாகவோ பார்க்கப்படவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இந்தியத் தரப்பு அந்த ஏற்பாடு குறித்து குறைந்தபட்சம் இறுதி நேரத்திலாவது முஸ்லிம் தலைமைகளுடன் பேசவில்லை. இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்த் தரப்புகளான பிரதான சிங்களக் கட்சிகளுக்குள் முஸ்லிம் பிரதிநிதிகள் அடக்கம் என்ற கருத்தோ அல்லது தீர்வு முயற்சியில் சம்பந்தப்படும் தமிழர் கட்சிகள் மற்றும் இனங்களுக்குள்ளும் முஸ்லிம்கள் சங்கமித்துள்ளனர் என்னும் கருத்து நிலைப்பாடோ மேலோங்கியிருந்திருக்கலாம். அதனாலோ என்னவோ இலங்கை - இந்திய ஒப்பந்த சமயத்தில் முஸ்லிம்களையும் ஒரு தரப்பாக அழைத்துப் பேசி, அவர்களின் கருத்துக்களையும் உள்வாங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படவேயில்லை. அது பெரும் தவறு.

இதனால், இந்த ஒப்பந்தம் தொடர்பில் முஸ்லிம்களுக்கு மனதில் ஒரு கசப்புணர்வு - காழ்ப்புணர்வு - நீடிக்கவே செய்கின்றது.

இந்தச் சமயத்தில், அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 18 ஆண்டுகள் இணைந்திருந்த வடக்கு, கிழக்கை மீண்டும் இணைப்பதற்கு முஸ்லிம்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழர் தரப்பு கோரிக்கை விடுப்பது எந்த வகையிலும் பொருத்தமற்றது.

எனவே, இணைப்புத் தொடர்பில் அதையும் தாண்டி நம்பிக்கையை ஊட்டும் செய்திகள், தகவல்கள், சமிக்ஞைகள் முஸ்லிம் தரப்புக்கு தமிழர் தலைமையிடமிருந்து செல்ல வேண்டும். நம்பிக்கை ஊட்டும் விதத்திலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது எந்தக் கூட்டணிக்கும் தனித்து ஆட்சியமைக்கக் கூடிய வலிமை கிட்டவில்லை.

அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட போதும் அந்தக் கூட்டணியினால் தனித்துப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாது போயிற்று.

அச்சூழலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாறியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்தோ அல்லது மஹிந்த தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்தோ ஆட்சியை அமைக்கக் கூடிய வாய்ப்பு அதற்குக் கிட்டியது.

முதலமைச்சர் பதவியிலிருந்து முழுவதையும் முஸ்லிம் காங்கிரஸ்ஸுக்கு விட்டுத் தருவதாகவும், முஸ்லிம் காங்கிரஸ்ஸுடன் சேர்ந்து ஆட்சியமைக்க விரும்புவதாகவும் முடிவு எடுத்து அதனை அறிவித்தது கூட்டமைப்பின் தலைமை.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸோ அந்த நல்லெண்ண சமிக்ஞையை நிராகரித்து புறமொதுக்கியமை மட்டுமன்றி, பொது ஜன ஐக்கிய முன்னணிக்குப் பின்னால், வாலைச் சுருட்டிக் கொண்டு போய், முதலமைச்சர் பதவியையும் அதற்கு வாரி வழங்கிவிட்டு, அது போட்ட 'எலும்புத்துண்டு' பிச்சையோடு அடங்கி நின்றது.

இத்தகைய முஸ்லிம் பிரதிநிதித்துவத்துடன்தான் இணைப்புக்கு இணக்கத்தைத் தேடுகின்றார் மாவை சேனாதிராசா. மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலை இது. ஆனாலும் முயற்சித்துப் பார்க்கத்தான் வேண்டும். ஒதுங்கி அல்லது ஒதுக்கி நிற்க முடியாது. காலத்தின் கட்டாயம் - அரசியல் நெருக்கடிச் சூழல் - அத்தகைய இக்கட்டுக்குள்ளேயே தமிழரை இன்று தள்ளி விட்டிருக்கின்றது.

# பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலை உயர்த்த அனுமதி இல்லை

### திறைசேரி உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

கொழும்பு, டிசெ.29

பாண், பணிஸ் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு அனுமதியளிக்கப்படாது என்று திறைசேரி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

சீனி, பாம் எண்ணெய் ஆகியவற்றின் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டுள்ளதாகக்கூறிப் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகள் உயர்த்தப்பட முயற்சிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும், பேக்கரி உரிமையாளர்களின் இந்த முயற்சி முற்றிலும் பிழையானது. அவ்வாறு விலைகளை உயர்த்த வேண்டிய அவசியமில்லை என்று திறைசேரியின் உயர் அதிகாரி ஒருவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பாம் எண்ணெய் மற்றும் சீனியின் இறக்குமதி வரி உயர்த்தப்பட்ட போதிலும் உள்நாட்டு சில்லறை விற்பனை சந்தையில் அவற்றுக்கான விலைகள் உயர்த்தப்படவில்லை.

இந்தநிலையில் பாம் எண்ணெய் மற்றும் சீனியின் விலை உயர்த்தப்பட்டுள்ளதாகக் கூறி பேக்கரி உற்பத்திகளின் விலைகளை உயர்த்த அனுமதிக்க முடியாது.

உலக சந்தையில் சீனியின் விலை குறைந்துள்ளது. இதன் அடிப்படையிலேயே இறக்குமதி வரி உயர்த்தப்பட்டுள்ளது.''- என்றார். (எ)

# நெல்லை விநியோகிப்பதில் தாமதம்; விலை உயர்வுக்கு அதுவே காரணம்

### குற்றம்சாட்டுகிறார் அரிசி வர்த்தகரான டட்லி சிறிசேன

கொழும்பு, டிசெ.29

நெல் கொள்வனவு சபையிடமுள்ள நெல்லை விநியோகம் செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக அரிசி விலை தற்போது அதிகரித்துள்ளதாக பிரபல அரிசி வர்த்தகரான டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.

மேலும் இதனுடன் தொடர்புடைய அமைச்சரின் அரசியல் தலையீடு காரணமாகவே நெல் விநியோகம் தாமதமடைந்துள்ளதாக அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நெல் கொள்வனவு சபையிடம் 2 லட்சம் மெட்ரிக் தொன் நெல் உள்ளது. இந்த நெல்லை விநியோகம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஜனாதிபதியும், பிரதமரும் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இந்த நிலையில், அமைச்சரின் தனிப்பட்ட எண்ணத்தின் காரணமாக நெல் விநியோகம் தாமதப்படுத்தப்படுகின்றமையே அரசியின் விலை அதிகரிப்புக்குக் காரணமாகியுள்ளது.

நெல் கொள்வனவு சபையிடமுள்ள நெல்லை விநியோகிக்கும் பொறுப்பு தலைவருக்கும், பணிப்பாளருக்குமே உள்ளது.

ஆனால், அந்த தீர்மானத்தை எடுக்க அவர்களுக்கு இடமளிக்காது, அவர்களின் அதிகாரத்தைப் பறித்துள்ள சம்பந்தப்பட்ட அமைச்சர், நெல் விநியோகத்தை நிறுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில், அரச வசமுள்ள நெல்லை அரிசியாக்கினால், ஒரு லட்சத்து 30 ஆயிரம் தொன் அரிசியைப் பெறலாம் என்பதை பொறுப்புடன் கூறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# நல்லாட்சி அரசாங்கத்தின் பயணத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே முட்டுக்கட்டை

### தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ.29

நல்லாட்சி அரசின் பயணத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியே தடுக்கின்றது என்று மலையக புதிய கிராமம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்து அவர் தெரிவித்தவை வருமாறு:

''நல்லாட்சி அரசின் முன்நகர்வுகளுக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி முட்டுக்கட்டைகளை போடுகின்றன.

அவ்வாறு தடையாக இருக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசை விட்டு உடனடியாக விலகிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் எதிர்வரும் 8 ஆம் திகதி மாற்றத்தின் பின்னர் நாடு முன்நோக்கி ஆரோக்கியமான நகர்வை மேற்கொண்டு வருகின்றது.

இந்த மாற்றத்துக்கு ஆதரவளிக்காத ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் நல்லாட்சி அரசின் பயணத்தை திசை திருப்ப முயற்சிக்கின்றனர்.

மேலும் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பதவி விலகினாலும் ஐக்கிய தேசிய முன்னணியால் அரசைக் கொண்டு நடத்த முடியும்.' - என்றார்.(எ)

# தேர்தலை திட்டமிட்ட வகையில் காலம் தாழ்த்த முயற்சிகள்

### கபே குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.29

தேர்தலை நடத்தாமல் திட்டமிட்ட வகையில் மேலும் காலம் தாழ்த்த முயற்சிக்கப்படுவதாக தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான கபே தெரிவித்துள்ளது.

எல்லை நிர்ணயச் சபையும், உள்ளூராட்சி மன்ற அமைச்சும் கூட்டாக இணைந்து வேண்டும் என்றே திட்டமிட்ட வகை யில் தேர்தலை காலம் தாழ்த்தி வருவதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அனைத்து உறுப்பினர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'எல்லை நிர்ணய அறிக்கை நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட இருந்த போதும் மொழி பெயர்ப்புப் பிரச்சினை காரணமாக இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டிருந்தது.


தேர்தலைக் காலம் தாழ்த்தும் நோக்கில் இவ்வாறு பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்படுகின்றன.' என்று குற்றம் சுமத்தியுள்ளார். (எ)

## நாளை

30.12.2016
வெள்ளிக்கிழமை
திதி : பிரதமை பி.ப. 2.24 வரை
நட்சத்திரம்: பூராடம்
பி.இ. 2.03 வரை
சுபநேரம் : 6.29 – 7.59
இராகுகாலம் : 10.59 – 12.29

### பாசையூர் மருத்துவ நிலையம் 59 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு:

# ஐ.ஓ.சி.போன்று ஏனைய வர்த்தக நிறுவனங்களும் எம் சமூகத்தை முன்னேற்ற பாடுபட வேண்டும்



## நேற்றைய திறப்பு விழாவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்திப் பேச்சு

யாழ்ப்பாணம் ,டிசெ.29

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கைக்கு இணங்க, பாசையூர் ஆரம்ப சுகாதார மகப்பேற்று நிலையத்தை இந்திய நிறுவனமான 'லங்கா ஐ.ஓ.சி' 59 லட்சத்து 20 ஆயிரத்து 920 ரூபா செலவில் மீளப் புனரமைத்துக் கொடுத்துள்ளது. இதனைத் திறந்து வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி.

இதனை முன்மாதிரியாகக் கொண்டு ஏனைய பிரத்தியேக நிறுவனங்களும் கம்பனிகளும் மற்றும் வர்த்தக நிறுவனங்களும் இவ்வாறான சமூகப் பொறுப்புணர்வின் கூட்டுப் பொறுப்பில் தங்களையும் பங்காளிகளாக்கி, எமது சமூகம் விரைந்து முன்னேற பாடுபட வேண்டும்.

-இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று பாசையூர் ஆரம்ப சுகாதார மகப்பேற்று நிலைய திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜன், லங்கா ஐ.ஓ.சி.நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் சியாம் போறா மற்றும் வைத்திய அதிகாரிகள்,திணைக்களஅதிகாரிகள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றுகையில் கூறியதாவது:

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் உதவிகள் மீண்டும் ஒருமுறை யாழ்.மக்களுக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதைப் பெருமையுடன்நினைவுகூர்ந்து யாழ்.மக்கள் சார்பாக அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுக்களையும் முதற்கண் தெரிவித்து எனது உரையை ஆரம்பிக்கின்றேன்.

யாழ்ப்பாண மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் மற்றும் பொது வைத்திய ஆலோசனை போன்றவற்றை வழங்குகின்ற பத்துக்கும் மேற்பட்ட சுகாதார கவனிப்பு நிலையங்கள் கடந்த கால யுத்தத்தினால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு இயங்க முடியாத நிலையில் காணப்பட்டன.

இந்த நிலையங்களை உடனடியாக புனருத்தாரணம் செய்வதற்கு ஏற்ற நிதி மூலங்கள் கிடைக்கப் பெறாத நிலையில் யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கையின் பேரில் யாழ்ப்பாணம் தண்ணீர் தாங்கிக்கு அருகில் அமைந்திருந்த யூபிலி மகப்பேற்று நிலையத்தை புனரமைப்புச் செய்து மீள இயங்கச் செய்வதற்கான உதவிகளை வழங்கி ஐ.ஓ.சி நிறுவனத்தினர் அதனைப் புனரமைப்புச் செய்து மீளக் கையளித்தனர். அவர்களின் பங்களிப்புடன் புனரமைப்புச் செய்யப்பட்ட மகப்பேற்று நிலையம் கடந்த வருடம் ஏப்ரல் 10 ஆம் திகதி வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிலையம் தற்பொழுது சிறப்புற நடைபெற்று வருகின்றது என்று அறிகின்றேன்.

இந்நிலையில் மீண்டும் மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கைக்கு அமைவாக பாசையூர் மருத்துவ நிலையம் 59 லட்சத்து 20 ஆயிரத்து 970 ரூபா செலவில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படுவதையிட்டு பெரும் மகிழ்வடைகின்றோம்.

கடந்தகால மோசமான யுத்த நடவடிக்கைகள் இப்பகுதியில் பேரழிவுகளை ஏற்படுத்தியது மட்டுமன்றி பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிரிழப்புக்கும் சொத்துப் பொருள் சேதங்களுக்கும் காரணமாகியிருந்தன. அத்தாக்கங்களில் இருந்து விடுபட முடியாத மக்கள் ஓரளவுக்காவது அவர்களின் தேவைகளை நிறைவுறுத்தும் வண்ணம் ஐ.ஓ.சி நிறுவனத்தார் உதவி வழங்கியிருப்பது போற்றுதற்குரியது.

யுத்தத்தின்போது சுடுகாடு போன்று காட்சியளித்த யாழ்ப்பாண நகரம் தற்போது மெல்ல மெல்ல அதன் முன்னைய பொலிவை அடைவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இது போன்ற உதவிகள் எம் மக்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியாக இருக்கும்.

அந்த வகையில் ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவிப்பதுடன் ஐ.ஓ.சி.கம்பனியின் இவ் உதவித் திட்டம் ஏனைய பிரத்தியேக நிறுவனங்களுக்கும் கம்பனிகளுக்கும் ஒரு முன்மாதிரியான செயலாக விளங்க வேண்டும் என தெரிவித்து அதிக இலாபம் ஈட்டக் கூடிய கம்பனிகளும், வர்த்தக நிறுவனங்களும் இது போன்ற சமூகப் பொறுப்புணர்வின் கூட்டுப் பொறுப்பில் தங்களையும் பங்காளிகளாக்கி இச் சமூகம் விரைந்து முன்னேற பாடுபட வேண்டும் எனத் தெரிவித்து எனது சிற்றுரையை நிறைவு செய்கின்றேன்.- என்றார் முதலமைச்சர்.

# மக்களின் வாழ்வை சீரமைக்க, முன்னேற்ற பொது அமைப்புகளின் சேவை அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பேச்சு



கோண்டாவில், டிசெ.29

நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்டு அல்லல்படும் மக்களின் வாழ்வைச் சீரமைக்கவும் முன்னேற்றவும் இது போன்ற பொது அமைப்புகளின் சேவை தொடர்ந்து தேவைப்படுகின்றது.

மக்கள் நலன் பேணும் அமைப்பில் உதவித் திட்ட நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவையாகும். இத்திட்டங்கள் மேலும் பல பிரதேச மக்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும்.- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மக்கள் நலன் பேணும் அமைப்பின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசும் போது கூறினார்.

கோண்டாவில் அரசடி விநாயகர் ஆலயத்தில் மேற்படி அமைப்பின் தலைவர் க.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறிதரன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது :-

இன்றைய அரசியல் சூழலில் அரசிடம் இருந்து தமிழர் தரப்புக்காகப் பெறக் கூடிய உரிமைகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதற் காகவே நாங்கள் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்து வருகின்றோம். எத்தகைய உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியுமே அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயன்று வருகின்றது. மக்களை விழிப்படையச் செய்ய இதுபோன்ற நிகழ்வுகளில் அரசியல் பேசவேண்டிய நிலையும் உருவாகியுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் க.தேவராசா பேசும் போது கூறியதாவது:-

மக்கள் நலன் பேணும் அமைப்பு கடந்த நான்கு ஆண்டுகளில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பலவிதமான உதவித் திட்டங்களைச் செய்து வந்துள்ளது. கோண்டாவிலைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமல்ல ஏனைய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உதவி வருகின்றமை பாராட்டுக்குரியதாகும். இவ்வமைப்பின் உதவிகளைப் பெற்ற பல மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. இவ்வமைப்பு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றமையால் பலர் நிதியுதவிகளை வழங்கவும் முன்வந்துள்ளனர்.

அமைப்பின் தலைவர் க.ஜெயபாலன் தலைமையுரையில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்கள் வருமானத்தை பெறும் வகையில் தையல் பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். பயிற்சி முடிவில் அவர்கள் நிரந்தர வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்குத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன என்றார்.

இத் திட்டத்துக்கு உதவும் வகையில் லண்டனில் வசிக்கும் இராசையா என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா காசோலையை பேராசிரியர் தேவராசா அமைப்பின் தலைவரிடம் கையளித்தார். இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான பணக் கொடுப்பனவுகளும் எழுது கருவிகளும் வழங்கப்பட்டன

(இ-59)


## வடக்கு மாகாண சபைக்கான "மாகாணகீதம்" ஒன்றினை உருவாக்குதல்

வடக்கு மாகாண சபைக்கான "மாகாணகீதம்" ஒன்றினை உருவாக்குவதற்கு வடக்கு மாகாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்களிடமும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

மாகாணகீதத்திற்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல், மரபுகள், கலைகள், கலாசாரங்கள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றைத் தழுவியதாகவும் பாரம்பரிய இசையினைக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

மாகாணகீதத்தினை எழுத்துருவில் தயாரித்து சமர்ப்பிக்க விரும்புவோர் வன்பிரதி (Hard Copy) மற்றும் மென்பிரதி (Soft Copy) ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிப்போர் கீதத்திற்கான ராகத்தையும் இணைத்தல் வேண்டும்.

ராகத்தை சமர்ப்பிக்க விரும்புவோர் அதனை வன்பிரதி (Hard copy) மற்றும் இறுவட்டில் (Compact Disc) பதிவு செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆக்கங்களை சமர்ப்பிப்பவர்களுடன் தொடர்புகொள்ளக் கூடியவாறு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆக்கங்கள் சுயமாகத் தயாரித்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனையவர்களுக்கு சொந்தமானதாகவோ, பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டதாகவோ இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், சபை நடவடிக்கைக்குழு, பேரவைச் செயலகம், வடக்கு மாகாணசபை, ஏ9 வீதி, கைதடி என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ, councilaffairsnpc@yahoo.com என்ற முகவரிக்கு மின்அஞ்சல் மூலமாகவோ, பேரவைச் செயலகத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**சி.வீ.கே.சிவஞானம்**
**அவைத் தலைவர் மற்றும் தலைவர்.**
**சபை நடவடிக்கைக்குழு.**
**வடக்கு மாகாணசபை**

(C/149)

# இந்த நாடு சர்வதேச நியதிகளுக்கு ஏற்ற விதத்தில் நீதியை வழங்கும் தகுதியைப் பெறவில்லையா?

## கேள்வி எழுப்புகிறார் துரைராஜசிங்கம் எம்.பி



களுவாஞ்சிக்குடி,டிசெ.29

போர்க்குற்ற விசாரணைகள் நடைபெறுகின்ற போது நாங்கள் மிகவும் விழிப்போடு இருந்து எங்களுக்கு இருக்கின்ற ஐயப்பாடுகளை அழுத்திச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனெனில் இங்கு அண்மைக் காலங்களில் இடம்பெற்ற வழக்குகளுக்கு வழங்கப்பட்ட தீர்ப்புகளை பார்க்கும் போது, இந்த நாடு இன்னும் சர்வதேச நியதிகளுக்கு ஏற்ற விதத்தில் நீதியை வழங்கக் கூடிய தகுதியைப் பெறவில்லையா என்ற கேள்வி எழுகிறது.

-இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் கிழக்கு மாகாணப் பாலர் பாடசாலை பணியகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்களின் வினைத்திறன் கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மயிலந்தனை, குமாரபுரப் பகுதிகளில் நடைபெற்ற படுகொலைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்றன. ஆனால் அந்த வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சாட்சிகளால் அடையாளம் கண்டு நீதிமன்றில் நிரூபிக்கப்பட்ட பின்பும் கூட அவர்கள் குற்றமற்றவர்கள் என்ற ரீதியில் விடுதலை செய்யப்பட்டார்கள்.

அதுமட்டுமல்ல தற்போது நடைபெற்று முடிந்திருக்கும் மாமனிதர் ரவிராஜின் படுகொலை தொடர்பான வழக்குக்கும் இதே நிலைமை தான். இந்த மூன்று வழக்குகளும் ஜூரிகள் சபை முன்னிலையில் இடம்பெற்றவை. இந்த ஜூரி சபைகள் குற்றம் சாட்டப்பட்டவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப சிங்களம் பேசுகின்ற ஜூரிகளின் முன்னிலையில் நடைபெற்றன. இந்த மூன்று வழக்குகளிலுமே குற்றம் சாட்டப்பட்டவர்கள் முற்றுமுழுதாக விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். எனவேதான் இந்த நாட்டின் நீதி தொடர்பாக நாங்கள் நியாயமானதொரு குரலை எழுப்புகின்றோம்.

இவ்வாறான நிகழ்வுகளைப் பார்க்கும் போது எந்தவிதமான விசாரணைகளும் இல்லாமலேயே தீர்ப்பு வழங்கலாம் போலிருக்கின்றது. அத்துடன் ஜெனீவாவுடைய அடுத்த அமர்வுக்கு முன்னதாக இலங்கை அரசாங்கம் எடுக்க இருக்கின்ற தீர்மானத்தின் அடிப்படையில் தான் இலங்கை அரசின் தலைவிதியும் தங்கி இருக்கின்றது .-என்றார். (ச)

# வீதிப் புனரமைப்பில் அரசியல் தலையீடு

## கவனவீர்ப்புப் போராட்டத்தில் நெய்தல் நகர் மக்கள்



திருகோணமலை,டிசெ.29

திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நெய்தல் நகர் பகுதியில் புனரமைப்புச் செய்யத் திட்டம் இடப்பட்டிருந்த 800 மீற்றர் வீதியின் அளவு தற்போது குறைக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணமாக உள்ள அரசியல் தலையீடுகளைக் கண்டித்து அப் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று புதன்கிழமை ஈடுபட்டனர்.

அல் ஸிலால் மத்திய கல்லூரியில் இருந்து பழைய இறங்குதுறை வரையான 800 மீற்றர் வீதியை 'காபெற்' வீதியாக அமைப்பதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கான நிர்மாணப் பொருட்களும் இறக்கப்பட்டு 2 மாத காலம் கடந்து விட்டது. இந்நிலையில் அதில் 520 மீற்றர் வீதி மாத்திரமே அமைக்கப்படும் என்று ஒப்பந்தக்காரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

மீதமாகவுள்ள 280 மீற்றர் வீதியை இங்குள்ள உள்ளூர் அரசியல்வாதிகள் தமது வீட்டுக்கு செல்கின்ற ஒழுங்கைகளை புனரமைக்க முயன்று வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் அரசியல்வாதிகள் , அரச அதிகாரிகள் எனப் பலருக்குத் தெரியப்படுத்திய போதும் எவரும் கருத்திற் கொள்ள வில்லை. இப்பிரச்சினைக்கான தீர்வு கிட்டும் வரை தாம் போராட்டத்தில் ஈடுபடுவோம். - என்றனர். (ச)

# பிள்ளையான் உட்பட நால்வருக்கும் ஜன. 11 வரை விளக்க மறியல் நீடிப்பு !

மட்டக்களப்பு,டிசெ.29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையான் உட்பட நால்வரையும் எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் எஸ்.தியாகேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் நடைபெற்ற நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்து கொண்டிருந்தபோது சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் நால்வரையும் நேற்று புதன் கிழமை நீதிமன்றில் ஆஜர் படுத்தியிருந்தனர். இதன் போதே இவர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (ச)

# ஏறாவூர் இரட்டைக் கொலை வழக்கு : அறுவருக்கும் தொடர்ந்து மறியல்

மட்டக்களப்பு,டிசெ.29

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதேசத்தில் இடம்பெற்ற இரட்டைக் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அறுவரையும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏறாவூர் பிரதேசத்தில் முகாந்திரம் வீதியில் உள்ள வீட்டில் வசித்து வந்த நூர் முஹம்மது ஹுஸைரா (வயது 56) அவரது திருமணமாகிய மகளான முஹம்மது யூசுப் ஜெஸீரா பானுவும் (வயது 32) ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 6 சந்தேக நபர்களையும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றப் பதில் நீதிவான் வி.தியாகேஸ்வரன் முன்னிலையில் நேற்று புதன்கிழமை ஆஜர் செய்தனர். இதன்போதே இவர்களுக்கான விளக்கமறியலை நீடிக்கப்பட்டுள்ளது. (ச)

# திருமலையில் கடும் வறட்சி: 400 குடும்பங்கள் பாதிப்பு!

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக 400 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளது.

வறட்சி காரணமாக இந்தக் குடும்பங்களில் உள்ள ஆயிரத்து 381 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள குடும்பங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

முத்துநகர் பகுதியில் 200 குடும்பங்களும், மங்கையோது பகுதியில் 225 குடும்பங்களும் மற்றும் வெலிகம பகுதியில் 15 குடும்பங்களுமே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன. (ச)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

பொத்துவில் தாறாம்பளை பகுதியில் உள்ளூர்த் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த 55 வயதுடைய நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டார்.

பிரஸ்தாப நபர் தாறாம்பளைக் காட்டுப்பகுதிக்கு துப்பாக்கியுடன் வேட்டையாடச் செல்வதாக விசேட அதிரடிப் படையினருக்குத்தகவல்கிடைத்ததை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. (ச)

# சின்னச்சவுக்கடியில் கைக்குண்டு மீட்பு

ஏறாவூர்,டிசெ.29

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னச்சவுக்கடி வயல் பகுதியில் இருந்து நேற்று புதன்கிழமை கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டது.

சின்னச்சவுக்கடிப் பகுதியிலுள்ள வயலுக்கு களைநாசினி தெளித்துக் கொண்டிருந்தபோது இந்தக் குண்டு தென்பட்டதை அவதானித்த வயல் உரிமையாளர், ஏறாவூர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து கைக்குண்டு பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட குண்டு யுத்த காலத்தில் புழக்கத்தில் இருந்த கையெறி குண்டு வகையைச் சேர்ந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)



*மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளில் 'பாதுகாப்பாக வாகனத்தைச் செலுத்துவோம்' என்ற தொனிப் பொருளின் கீழ் பொலிஸ் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட விழிப்புணர்வு நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.*

*பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளான எச்.ஆர்.பீ சேனநாயக்க மற்றும் சிந்தக்க பீரிஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் போக்குவரத்துப்பிரிவு அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.*

*வீதியில் பயணம்செய்த ஆட்டோக்கள், பஸ் வண்டிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களிலும் 'நான் நற்பண்புள்ள ஒரு சாரதியாவேன்' என்ற மகுடவாசகம் பொறிக்கப்பட்ட விஷேட ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றமையைப் படத்தில் காணலாம்.* (ச)

# மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க துணிச்சலுடன் கருத்துக்களை தெரிவித்த அரசியல்வாதி

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுதாபச் செய்தி



கொழும்பு, டிசெ.29

மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க துணிச்சலுடன் கருத்துக்களை தெரிவித்த அரசியல்வாதியாகத் திகழ்ந்தார் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மறைவை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ரட்ணசிறி விக்கிரமநாயக்க 20 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் இலங்கை அரசியலில் பிரவேசித்தார். அவர் கிராமிய பிரபுக்கள் தலைமைத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்திய பண்பட்ட அரசியல்வாதியாவர்.

அவரின் மறைவையிட்டு நான் ஆழ்ந்த கவலையடைந்துள்ளேன்.

மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரசியல் வரலாற்றில் நேரடியாக துணிச்சலுடன் கருத்துக்களை தெரிவித்த அரசியல்வாதியாவார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் செயற்பாட்டு அரசியலில் பிரவேசித்து லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதிநிதி என்ற ரீதியில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டார். இதன் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உப தலைவர் பதவியை வகித்ததுடன் அவர் இறக்கும் வரையில் சிரேஷ்ட ஆலோசகராக பதவி வகித்து வந்தார். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆலோசகராகவும் செயற்பட்ட இவர் கட்சி சவாலுக்கு உள்ளான அனைத்து சந்தர்ப்பங்களிலும் கட்சிக்காக உயர்வான அர்ப்பணிப்புடன் அரசியலில் ஈடுபட்டார்.

இது உன்னதமான அரசியல் செயற்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

எம்முடன் மிக நெருக்கமாக கட்சியின் வெற்றிக்காக பாடுபட்ட முன்னோடி அரசியல்வாதியாவார்.

அவரின் மறைவினால் ஆழ்ந்த துயருற்று இருக்கும் அன்னாரினது அன்பு மனைவி, மகனான நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹொரண பிரதேச ஆதரவாளர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# இராணுவ முகாம்களுக்கு முதலில் பாதுகாப்பு; பின்பே கண்ணிவெடி பிரகடனத்தில் கையெழுத்து

## பாதுகாப்புச் செயலர் ஹெட்டியாராச்சி தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.29

இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கான மாற்று ஏற் பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, கண்ணி வெடி களைத் தடை செய்யும் சர்வதேச பிரகடனத்தில் இலங்கை அரசாங்கம் கையெழுத்திடும் என்று பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஒட்டாவா உடன்பாடு என்று அழைக்கப்படும், கண்ணி வெடிகளைத் தடை செய்யும் சர்வதேச பிரகடனத்தில் 160 நாடுகள் அமைப்புகள் கையெழுத்திட்டுள்ளன.

இந்தப் பிரகடனத்தில் கையெழுத்திடுவதற்கு இலங்கை அமைச்சரவை கடந்த மார்ச் மாதம் அனுமதி அளித்திருந்தது.

எனினும், இதுவரை பாதுகாப்பு அமைச்சு இதற்கு அனுமதி வழங்கவில்லை.

இது தொடர்பில் பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி கருத்துத் தெரிவிக்கும்போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவ முகாம்களைப் பாதுகாப்பதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின்னரே, கண்ணிவெடிகளைத் தடை செய்யும் சர்வதேச பிரகடனத்தில் அரசாங் கம் கையெழுத்திடும். இந்த உடன்பாட்டில் இலங்கை கையெழுத்திடாமல் இருப்பதற்கும், நல்லிணக்கத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# முன்னாள் பிரதமரின் இறுதிச் சடங்கு சனியன்று ஹொறணையில்!





கொழும்பு, டிசெ.29

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இறுதிச் சடங்கு நாளை மறுதினம் 31 ஆம் திகதி ஹொறணையில் இடம்பெறவுள்ள நிலையில், உள்விவகார அலுவல்கள் அமைச்சு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

மேலும், முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இறுதிக் கிரியைகளுக்கு பூரண அரச அனுசரணை வழங்கப்படும் என்றும் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அமைச்சர் வஜிர அபேவர்தன கூறியுள்ளார்.

அதேவேளை, மறைந்த ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் உடல் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10.30 தொடக்கம் 11.30 வரை, மறைந்த மூத்த அரசியல்வாதியான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வருமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபாநாயகர் கருஜெயசூரிய அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் முன்னாள் பிரதமரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ரட்ணசிறி விக்கிரமநாயக்க 2000 -2001 ஆண்டு மற்றும் 2005 - 2010 ஆண்டுகளில் இலங்கையின் பிரதமராக இருந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவது ஊடகங்களின் பொறுப்பு

## தென்மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா



காலி, டிசெ.29

பொதுமக்களுக்கு சரியான தகவல்களை வழங்குவது ஊடகங்களின் பொறுப்பாகும் என்று தென்மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலி லபதுவயில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஊடகங்கள் சிறப்பான பணியை நிறைவேற்றி வருகின்றன.

நாட்டில் இடம்பெறும் அபிவிருத்திப் பணிகள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதில் ஊடகங்கள் பெரும் பணியை நிறைவேற்றுகின்றன.

மேலும், அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய பிரிவுகளை சுட்டிக்காட்டும் விடயங்கள் அனைத்து ஊடகங்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஊடகங்கள் எப்போதும் மக்களையே முன்னிலைப்படுத்த வேண்டும். தற்போதைய அரசாங்கம் தகவல்களை சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமையை வழங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மத்திய மாகாண சபையிலும் நிராகரிப்பு

கொழும்பு, டிசெ.29

மாகாண சபைகளின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் மத்திய மாகாண சபையிலும் நிராகரிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாண சபையில் 32 மேலதிக வாக்குகளால் இந்த சட்டமூலம் நிராகரிக்கப்பட்டுள்ளது.


அபிவிருத்தி விசேட ஏற்பாடுகள் சட்டமூலத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளியேறியுள்ளனர்.

மேலும் நான்கு உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை, இந்த சட்டமூலம் தென்மாகாண சபையிலும் சப்ரகமுவ மாகாண சபையிலும் நேற்று முன்தினம் நிராகரிக்கப்பட்டது.

தொழிலுக்குச் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்ததை அடுத்து

# சுருக்குவலை தொழிலில் ஈடுபடும் தாழ்வுப்பாடு மீனவர் வீதி மறியல்







மன்னார், டிசெ.29

மன்னார், தாழ்வுப்பாடு பகுதியில் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களை தொழிலுக்குச் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்ததை அடுத்து நேற்றுக் காலை வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுருக்குவலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்கள் நேற்றுக்காலை மீன்பிடித் தொழிலுக்குச் செல்ல முயற்சித்த போது கடற்படையினர் அனுமதி வழங்க மறுத்துள்ளனர். சட்ட விரோத மீன்பிடி முறையைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்க முடியாது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

எனினும் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கின்றனர் மீனவர்கள்.

பண்டிகைக்காலத்தில் தமது வாழ்வாதாரத்தை சீர்குலைக்கும் வகையில் கடற்படையினர் செயற்படுகின்றனர் எனக் குற்றம் சுமத்தியுள்ளனர் அவர்கள்.

இந்தநிலையில் மீனவர்கள் வீதிகளில் வீதித் தடைகளை ஏற்படுத்தி ரயர்களைக் கொளுத்தி தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இதன்போது மீனவர் ஒருவர் தீக்குளிக்க முயற்சித்த நிலையில் ஏனையவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார். (எ)

## மீன்பிடிக்கச் சென்றவர் சடலமாக வீட்டுக்கு

தலைமன்னார் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலுக்காக கட்டுமரத்தில் தனிமையாகச் சென்றவர் வீட்டுக்கு சடலமாகக் கொண்டுவரப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் தலைமன்னார் கிராமம் கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.


இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

''தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான லோறன்ஸ் கொன் சல்லேயம் (மனோ-வயது 63) என்பவர் சம்பவ தினத்தன்று நண்பகல் வழமைபோன்று கட்டுமரத்தில் நண்டு வலையைக் கடலில் வைப்பதற்காக தனித்துச் சென்றுள்ளார்.

வழமை போன்று அவர் வீடு திரும்பாததால் அவரைத் தேடி உறவினர்கள் கடற்கரைக்குச் சென்று தேடியபோது அவர் தனது கட்டுமரத்திலே மரணித்த நிலையில் காணப்பட்டார் என்று தெரிவிக்கப் படுகிறது. அவர் மீன்பிடி வலைகளைக் கடலில் வைத்து விட்டுக் கரை திரும்பிய பின்பே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிய வருகிறது. சடலம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டது. தலைமன்னார் பொலிஸாரும் இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எ-112)

## அக்கராயனில் புலி நடமாட்டம் அங்குள்ள மக்கள் அச்சத்தில்!

போக்குவரத்தில் ஈடுபடுவோர் சிரமத்தில்



கிளிநொச்சி, டிசெ.29

அக்கராயனுக்கும் வன்னேரிக் குளத்துக்கும் இடையிலான வீதியில் புலி ஒன்றின் நடமாட்டம் காணப்படுகின்றது.

இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் அச்சத்துடன் தங்களது அன்றாடச்செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு முன்னரான ஒன்பதாம் கட்டைப் பகுதியிலேயே, வீதியைக் குறுக்கறுத்து புலி பாய்ந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய கிராமங்களில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மக்கள், காலையில், சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றில், அக்கராயன் பிரதேச மருத்துவமனை, கிளிநொச்சி நகரம் ஆகியவற்றுக்குத் தங்களது தேவைகளுக்காகப் பயணம் செய்கின்றனர்.

இந்தநிலையில் 9 ஆம் கட்டைக் காட்டுப்பகுதியில், கடந்த 15 நாள்களாக வீதியில் புலியின் நடமாட்டம் காணப்படுகிறது. இதனையடுத்து, போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் அச்சமடைந்து, அக்கராயன் பொலிஸார், கிராம அலுவலர்கள் ஆகியோரிடம் புலியின் நடமாட்டம் தொடர்பாக தகவல் வழங்கியுள்ளனர். (எ)

## குடிமனையை நோக்கிப் படையெடுக்கும் பாம்புகள்

கிளிநொச்சி, டிசெ.29

சீரற்ற காலநிலை காரணமாக காடுகளில் இருந்து பாம்புகள் கிளிநொச்சிப் பிரதேச குடிமனைகளை நோக்கி படையெடுக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக பொதுமக்கள் பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர்.அதில் ஒன்றுதான் பாம்புகளின் படையெடுப்பு.

கிளிநொச்சி, அக்கராயான், ஆனை விழுந்தான், வன்னேரி மற்றும் கந்தபுரம் உள்ளிட்ட இடங்களில் அடிக்கடி பாம்புகள் வீடுகளை நோக்கி வருகின்றன என்று அங்குள்ள பொது மக்கள் தெரிவித்துள்ள னர்.

இதேவேளை, அங்கு மின்சாரவசதிகள் அற்ற நிலையில் தற்காலிக வீடுகளில் வசிக்கும் பொதுமக்கள் மேலும் அச்சமடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## யானைகளினால் ஆபத்து; மின் வேலி அமைத்து தருக!

### துணுக்காய் பிரதேச கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, டிசெ.29

முல்லைத்தீவு மாவட்டம், துணுக்காய் பிரதேசத்தில் ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் யானைகளைக் கட்டுப்படுத் துவதற்கு மின்சார வேலிகள் அமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐயன்கன்குளத்தில் 210 குடும்பங்களும் பழைய முறிகண்டியில் 40 குடும்பங்களும், புத்துவெட்டுவானில் 80 குடும்பங்களும், யானைகளின் தொல்லைகளுக்கு ஆளாகியுள்ளன. அத்துடன் விவசாயச் செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக புத்துவெட்டுவானில் இருந்து ஐயன்கன்குளம் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும், மருத்துவமனைக்குச் செல்லும் மக்களும், அடிக்கடி யானைத் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். அது மட்டுமல்லாமல் யானைகளால் துரத்தப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

எனவே வெடிகளுக்குக் கூட அஞ்சாத யானைகளை எதிர்கொள்வதற்கு, மின்சார வேலியை அமைத்துத் தருமாறு, அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## கிளிநொச்சியில் அதிகரிக்கும் கால்நடைத் திருட்டுகள்

கிளிநொச்சி, டிசெ.29

கிளிநொச்சி, பூநகரி, இரணைதீவில் உள்ள கால்நடைகள், திருடப்பட்டு வருகின்றன என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரணைதீவில் இருந்த மக்கள், முற்றாக இடம் பெயர்ந்து, முழங்காவில் - இரணைமாதா நகரில் தங்கியுள்ள நிலையில், இரணைதீவில் பொது மக்களால் கைவிடப்பட்ட நூற்றுக்கணக்கான கால்நடைகள், அந்தப் பிரதேசத்திலேயே உள்ளன.

இந்தநிலையில், அங்குள்ள அந்தக் கால்நடைகள், இறைச்சிக்காக களவாடப்பட்டு வருகின்றன. இரணைதீவில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட கால்நடைகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கால்நடைகளை பாதுகாப்பதற்கான முயற்சிகளை, அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும், இரணைதீவில் மக்களை மீளக்குடியேற்றவும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கும் அனுமதிக்க வேண்டும் என்று இரணைதீவு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அதனையடுத்து, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரணைதீவுக்குச் சென்றுவந்த நிலையிலும், இதுவரையிலும் அங்கு மீள்குடியேற்றம் இடம் பெறவில்லை. இரணைதீவு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட அந்தப்பகுதி, முழுமையாக கடற்படையினரின் பயன்பாட்டில் கடந்த 26 வருடங்களுக்கு மேலாக இருந்து வருகின்றது.

1992ஆம் ஆண்டு நடைபெற்ற போர் காரணமாக வெளியேற்றப்பட்டு, இரணைமாதா நகர் என்ற மாதிரிக் கிராமம் உருவாக்கப்பட்டே இந்த மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

இவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் என்பனவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனினும், இந்த மக்களின் கடற்றொழிலுக்கான வசதி வாய்ப்புக்கள், இதுவரை செய்துகொடுக்கப்படவில்லை. (எ)

# அலப்போவில் நடைபெற்றுவரும் படுகொலை இலங்கை இனப்படுகொலைக்குச் சமமானதே

## நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் அலுவலக அறிக்கையில் தெரிவிப்பு

சிரியாவின் அலெப்போ நகர மக்களுக்கு எதிராக கடந்த சில நாள்களாக ரஷ்ய, சிரிய அரச படைகள் மேற்கொண்டு வரும் கொடூரமான போர்க்குற்றங்கள் 2009 ஆம் ஆண்டின்போது இலங்கை அரசு ஈழத் தமிழர் மீது நடத்திய இனப்படுகொலையை நினைவுக்குக் கொண்டு வருகின்றது.

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் பணி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்கூறப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும், குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

'அனைத்துலக சமூகம் மீள இம்முறையும் அப்பாவிக் குடிமக்களின்உயிர்களைப் பாதுகாப்பதிலும், சர்வதேச ஒழுங் கமைப்புகள் மற்றும் சட்டமுறை விதி களைப் பேணுவதிலும் இழிவான வகையில் தவறியுள்ளன.

பல்வேறு மனித உரிமை அமைப் புகள் ஐ.நாவின் சிரிய விவகாரம் தொடர்பானவிசாரணைக்குழுவிடம் முன்வைத்த ஆவணம் ஒன்றின்படி அலெப்போ பகுதியில் ரஷ்யாவின் வான்வழித் தாக்குதல்கள் மூலம் 380 சிறுவர்கள் உட்பட ஆயிரத்து 207 பொதுமக்கள்கொல்லப்பட்டுள்ளனர். பொதுமக்கள் கொல்லப்படுவதைத் தடுக்கும் சர்வதேச சட்டங்களுக்கு முரணான வகையில், குறிப்பாக ஜூலை முதல் ஜனவரிக்கு உட்பட்ட காலத்தில், 304 தாக்குதல்கள் நிகழ்த் தப்பட்டுள்ளமையையும் இவ் ஆவ ணம் குறிப்பிட்டுள்ளது.

வன்னியில் 2009 நடுப்பகுதியில் No Fire Zone என்ற பாதுகாப்பு வலயத்தில்தஞ்சமடைந்திருந்ததமிழ் மக்களை இலங்கை அரச படையினர் சுற்றி வளைத்துக் குண்டு பொழிந்து கொன்றொழித்த போது உயிரிழந்தோர் ஒரு லட்சத்தினர் என்று மதிப் பிடப்பட்டது. அந்தநேரத்தில் ஐ.நா வும் உலக சமூகமும் இலங்கை அர சின்தாக்குதல் அழிவுகளைக்கண்டும் காணாமல் இருந்ததும் இந்தக் குற் றங்கள் சார்பில் இன்றுவரை ஒருவர் கூடத் தண்டிக்கப்படவில்லை என்ப தோடு இக்குற்றம் புரிந்தோரை சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்து வதில் உலக ஆதிக்கவலுவுள்ளோர் எவரும் ஆர்வம் காட்டுவதாயும் இல்லை.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தோ ருக்கென நீதி தேடுவதில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எது வந் தாலும் எத்தனை காலம் எடுத்தாலும் பற்று றுதியுடன்செயற்படும். எமது அத்தகை முயற்சிகளை நாம் தமிழர் சார்பில் மட்டும் மேற்கொள்ளவில்லை.

உலகிலுள்ள பல்வேறு அரசுகளும் அவர்களது கூலிப் படைகளும் தத்தமது அதிகாரத்தையும் நில ஆதிக்கத்தையும் நிலை நாட்ட வெனமேற்கொள்ளும்யுத்தங்களில் மீண்டும் மீண்டும் 'தவிர்க்க முடி யாதஅழிவு'என்றுகுறிப்பிடப்படும் அளவுக்கு மடிந்து போகும் எண் ணற்ற பொதுமக்கள்சார்பிலும்நாம் இப்போராட்டத்தை மேற்கொண் டுள்ளோம்.

இரண்டாம் உலகப் போரின் அழிவுக்குப் பின்னர் ஐரோப் பாவில் நாசிகள் மேற்கொண்ட கொடுமைகள் மீளவும் நிகழாமல் பார்ப்பதற்கென உலகின் வலு மிக்க சக்திகள் மத்தியில் அனைத் துலக சட்டங்களை மதிக்கும் தன் மையும், பிணக்குகள் ஏற்படும் இடத்தில் இராஜதந்திரவழியிலான பேச்சுகள் மூலம் அவற்றைத் தீர்த்து வைப்பர் என்ற பலத்த எதிர் பார்ப்பும் இருந்து வருகிறது. அவ் வகை உன்னதமான இலட்சியங் களுக்கு அமைய நடப்பதற்குப் பதி லாக உலக சமூகம் இன்று தானும் அதே குற்றங்களை அடிக்கடி கையில் எடுக்கும் குற்றவாளி யாகவே தென்படுகிறது.


சர்வதேச மயப்படுத்தப்பட்ட இன்றையஉலகஒழுங்கில்பூமியில் குடிமக்களுக்குச் சரியான நீதியை வழங்கவல்ல, உண்மையிலேயே பக்கச்சார்பற்ற, சுயாதீனமாக இயங்கவல்லஉலகநிறுவனங்கள் முன்னென்றும் இல்லாத அள வுக்குத் தேவைப்படுகின்றன.

போர்க் குற்றம் புரிந்தோர் தத் தமதுநாடுகளினது இறையாண்மை என்ற கவசத்தின் பின்னால் மறைத்துப் பாதுகாக்கப்படும் நிலைமை இருக்கக் கூடாது. அவ்வகைக் குற்றம் புரிந்தோர் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப் படாத போது முழு மானிடத்தின் எதிர்காலமுமே கேள்விக்குள்ளா கிறது.

அத்தகைய உலகமட்ட நிறு வனங்களை உருவாக்குவதெ னில் மக்களது சார்பில் இயங்கத் தவறி உலக அரசாங்கங்களின் பிரதிநிதியாகிவிட்ட ஐ.நா. உட் பட்ட நிறுவனங்களிடையே தீவிர மானதும் ஆழமானதுமான மறு சீரமைப்புத் தேவைப்படுகிறது.

அத்தகைய மறுசீரமைப்பு நிகழுமானால் அதுவே சர்வதேச ஒழுங்கும் நீதியும் முறிவடைந் ததன் காரணமாக அர்த்தமற்ற வகையில்அநியாயச் சாவடைந்த அனைத்து உயிர்களுக்குமான பிராயச்சித்தமாக அமையும்.

அப்போது உலகிலுள்ள சாதா ரண குடிமக்கள் மனதில் தாமும் வெறும் எண்ணிக்கையாகிப் போய்விடாமல் மனிதர்களாக மதிக்கப்படும் வாய்ப்பு உண் டென்று நம்பிக்கை பெறுவர்.'- என்றுள்ளது. (எ)









# ஜேர்மனியில் நடைபெற்ற ஆழிப்பேரலையின் நினைவு நிகழ்வு

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காவு கொள்ளப்பட்ட மக்களுக்கான 12 ஆம் ஆண்டு அஞ்சலி வணக்க நிகழ்வு ஜேர்மனியில் அனுட்டிக்கப்பட்டுள்ளது.


ஜேர்மனியின் பல்வேறு இடங்களிலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத் தப்பட்டுள்ளது.

ஆலன் நகரில் உள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற அஞ் சலியில், நகர மதகுருவுடன் இணைந்து புலம் பெயர் தாயக மக்கள் பங்கேற்றிருந்தனர். இதன்போது ஆழிப் பேரலையால் காவுகொள்ளப்பட்ட மக்களையும், ஜேர்மன் தலைநகர் பெர் லினில் படுகொலை செய்யப்பட்ட மக்களையும் நினைவு கூர்ந்து சுடரேற்றினர்.

இதேவேளை ஜேர்மன் தமிழ் இளையோர் அமைப்பினரின் ஏற்பாட்டில் எசன் நகரில் இடம்பெற்ற வணக்க நிகழ்வில், நினைவுத்தூபிக்கு முன்பாக ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்ட மக்களின் நினைவாகச் சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

அத்துடன் தலைநகர் பெர்லினில், சுனாமிப் பேரலையால் பலியான மக்களை நினைவு கூர்ந்தும் பெர்லின் நகர மத்தி யில் பயங்கரவாத செயலால் கொல்லப்பட்ட 12 பொது மக்களையும் நினைவேந்தி 24 சுடர்கள் ஏற்றப்பட்டன.

அதுமாத்திரமன்றி மற்றும் சில நகர்களிலும் ஆழிப் பேர லையால காவு கொள்ளப்பட்ட மக்கள் நினைவு கூரப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)



# அன்ரன் பாலசிங்கத்தின் நினைவு நிகழ்வு

## ஜேர்மனியில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது

தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங் கத்தின் 10 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமைஜேர்மனிலுள்ளடோர்ட்மூண்ட் நகரில் மிக உணர்வுபூர்வமாக நடை பெற்றது .

நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கத்துக்கு ஈகச்சுடர் ஏற்றப் பட்டு, அவருடைய திருவுருவப் படத் துக்கு மலர்மாலை அணிவிக்கப் பட்டது.

அதனைத்தொடர்ந்து மக்களால் மலர் மற்றும் சுடர் வணக்கம் செலுத் தப்பட்டு , விடுதலை நோக்கிய அரங்க நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

அரங்க நிகழ்வுகளில் முதலாவதாக தேசத்தின்குரல் நினைவு சுமந்த காணொலிகள் ஒளிபரப்பப்பட்டன. தொடர்ந்து தேசத் தின்குரல் நினைவு சுமந்த கவிதைகள், எழுச்சிப் பாடல் கள் மற்றும் மேஜர் பாரதி கலைக்கூடம் மற்றும் தமிழர் கலைபண்பாட்டுக் கழக ஆசிரியர்களின் நெறியாள்கை யில் எழுச்சி நடனங்களும் இடம் பெற்றன. (எ)





பொன்.வேணு கிருஷ்ணா

# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?" 45



**ஊடக பிரசார நடவடிக்கைகள் விதிவிலக்கின்றி இரத்தக்களரியான இராணுவ சாகசத்தையே முன்னெடுத்துள்ளன.**

இதுபோன்ற ஊடக பிரசார நடவடிக்கை புதிதல்ல. 2001 இல் ஆப்கானிஸ்தான் மீதான படையெடுப்புக்கு முன்னதாக செப்ரெம்பர் 11 பயங்கரவாத தாக்குதல்களுக்காக ஆப்கானிஸ்தான் மீது பழிசுமத்திய முயற்சிகள்; 2003 ஈராக் படையெடுப்புக்கு முன்னதாக ''பாரிய பேரழிவுகரமான ஆயுதங்கள்'' குறித்து பொய் உரைகள்; 2011 இல் பெங்காசியில் அமெரிக்க குண்டுவீச்சு மற்றும் லிபியாவை நாசமாக்கியதற்குப் பின்னர் அங்கிருந்த அப்பாவி மக்கள் கொல்லப்பட இருந்தணர்எனக்குறிப்பிட்ட செய்திகள் என அவை ஒவ்வொரு விதிவிலக்கின்றி இரத்தக்களரியான இராணுவ சாகசத்தையே முன்னெடுத்துள்ளன.

**உலகின் இரண்டாவது அணு சக்தி நாடான ரஷ்யாவிற்கு எதிராக**

எவ்வாறிருப்பினும் இப்போது வித்தியாசம் என்னவென்றால் இந்த பிரசாரம் நடைமுறையளவில் ஒரு நிராயுதபாணியான மற்றும் வறிய முன்னாள் காலனியை நோக்கி அல்ல, மாறாக உலகின் இரண்டாவது அணு சக்தி நாடான ரஷ்யாவிற்கு எதிராக திருப்பி விடப்பட்டுள்ளது. ரஷ்யாவிற்கு எதிரான ஒரு போர் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதையோ, எத்தனை



### Who's to blame for the Iraq war?




From top left: Albert Wohlstetter, Oded Yinon, Richard Perle, William Kristol, Robert Kagan, David Wurmser, Paul Wolfowitz, Joseph Lieberman, William Safire, Eliot Cohen, David Frum, Norman Podhoretz, Kenneth Adelman, Charles Krauthammer, Benjamin Netanyahu, Philip Zelikow, Elliott Abrams, Lewis "Scooter" Libby, Douglas Feith and Bernard Lewis.

மக்கள் கொல்லப்படுவார்கள் என்பதையோ, மனித இனத்தையே அழிவுக்கு இட்டுச் செல்லும் அணுஆயுத பரிவர்த்தனையை அதுபோன்றவொரு போர் எவ்வாறு தவிர்க்கும் என்பதையோ குறித்து இந்த பிரசாரத்தை நடத்துகின்ற எந்தவொரு பிரமுகரும் கவனமெடுப்பதில்லை.

**"இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நமது படை அனுபவித்துள்ள எதையும் போன்றில்லாமல், மிகவும் அதிபயங்கரமானதாக"**

முதல்தலைப்புக்கள் மற்றும் அவதூறு பரப்பும் ஆசிரிய தலையங்களுக்குப் பின்னால், 60 ஆண்டுகளில் பார்த்திராத அளவில் போர்முறைக்கான தயாரிப்புக்கு நிஜமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்தாண்டின் தொடக்கத்தில், அமெரிக்க இராணுவ தலைமை தளபதி ஜெனரல் மார்க் A. மில்லெ அமெரிக்க இராணுவ அமைப்பிற்கு கூறுகையில், இராணுவம் வல்லரசுகளுக்கு எதிரான போர்களுக்குத் தயாரிப்பு செய்ய வேண்டும். அவை 'இரண்டாம் உலக போருக்குப் பின்னர் நமது படை அனுபவித்துள்ள எதையும் போன்றில்லாமல், மிகவும் அதிபயங்கரமானதாக' இருக்கும் என்றார்.

**அவர் ரஷ்யாவிடம் ''மிருதுவாக'' இருக்கிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில்**

கடந்த சில வாரங்களாக அபிவிருத்தி அடைந்துள்ள இந்த பிரசாரம், கிளிண்டன் நிர்வாகத்தின் கொள்கை என்னவாக இருந்திருக்கும் என்பதை தெளிவுபடுத்துகிறது. ஜனநாயகக் கட்சியும் மற்றும் அதன் பின்னால் அணிவகுத்துள்ள ஊடகங்களும் அண்மித்து மூன்று மில்லியன் வாக்குகளால் மக்கள் வாக்களிப்பில் ட்ரம்ப் தோல்வி அடைந்திருப்பதன் அடிப்படையிலோ, அல்லது அவர் வலதுசாரி, பிற்போக்குத் தனமான பில்லியனர்கள், வங்கியாளர்கள், வணிக நிர்வாகிகள் மற்றும் தளபதிகளைக் கொண்ட ஒரு மந்திரிசபையை அமைப்பது குறித்தோ அல்லாமல், மாறாக அவர் ரஷ்யாவிடம் ''மிருதுவாக''




இருக்கிறார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவரை எதிர்ப்பதற்காக அவற்றினது எதிர்ப்பை அமைத்துக் கொண்டுள்ளன. அதாவது, ஜனநாயக கட்சி வலதிலிருந்து ட்ரம்ப் ஐ தாக்க செயற்பட்டு வருகிறது.

**பத்திரிகைகளது இரத்தம் கொதிக்கச் செய்யும் அறிவிப்புகள்**

அமெரிக்காவுக்குள் இந்த முரண்பாட்டின் விளைவு என்னவாக இருந்தாலும், அமெரிக்க ஆளும் வர்க்கம் போருக்கு தயாரிப்பு செய்து வருகிறது. 25 ஆண்டுகளுக்கு முன்னர் சோவியத் ஒன்றியம் கலைக்கப் பட்டமையானது, தொடர்ச்சியான சமாதானத்தின் சகாப்தம் ஒன்றை குறித்தும், அத்தகைய சகாப்தத்தில் போட்டியாளர் இல்லாத அமெரிக்காவின் மேலாதிக்கத்தின் கீழ், உலகம் 20 நூற்றாண்டில் மனிதயினத்தைத் தொற்றியிருந்த போர்களில் இருந்து சுதந்திரமாக இருக்கும் என்றும் உணர்ச்சிப் பிரவாக அறிவிப்புகளுடன் வரவேற்கப்பட்டது. இப்போதோ, ஒரு கால் நூற்றாண்டு இரத்தந்தோய்ந்த பிராந்திய மோதல்களுக்குப் பின்னர், பத்திரிகைகளது இரத்தம் கொதிக்கச் செய்யும் அறிவிப்புகள், ஒரு புதியவகை உலகப் போர் உருவாக்கப்பட்டு வருகிறது என்பதையே தெளிவாக்குகின்றன.

(கேள்வி தொடரும்...)



காலைக்கதிர்
Kalaikkathir





ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர் களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின் றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.






# தமிழ்த் தேசிய எழுச்சி

10

## விடுதலைப் புலிகளின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆரம்பத்தில் புலிகள் இயக்கம், ஒரு நகரப்புற கெரில்லா அலகாக தனது கட்டமைப்பை நிறுவிக் கொண்டது. மிகஉயர்ந்த அர்ப்பணிப்பும், இலட்சிய உறுதிப்பாடும் கொண்ட இளம் போராளிகளை பிரபாகரன் தனது அணியில் அரவணைத்துக் கொண்டார். தலைமைக்கு விசுவாசமானவர்களாகவும், தமிழ் மக்களின் விடுதலைக்காக தமது உயிரையே ஈகம் செய்யத் தயாரானவர்களாகவும் புலி உறுப்பினர்கள் விளங்கினர். தேச விடுதலை என்ற அரசியல் இலட்சியத்துக்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்து, மிகக் கண்டிப்பான ஒழுக்கக் கட்டுப்பாட்டுக் கோவையைக் கடைப்பிடித்த விடுதலைப் புலிகள் ஆரம்ப காலத்தில் ஒரு தலைமறைவு அமைப்பாகவே விளங்கினர்.

தொடக்கத்தில்,கெரில்லா போரியல் முறையிலான ஆயுதப் போராட்ட வடிவத்தையே பிரபாகரன் தேர்ந்தெடுத்தார். தமிழீழ மண்ணின் களநிலை யதார்த்த சூழலுக்கு கெரில்லாப் போராட்ட முறையே சாலச் சிறந்த ஆயுதப் போர்வடிவம் என்பது அவரது கணிப்பு. ஆபிரிக்காவிலும் லத்தீன் அமெரிக்காவிலும் குடியேற்ற வல்லரசுகளின் அடக்குமுறைக்கு எதிராக நிகழ்த்தப் பெற்ற ஆயுதப் போராட்ட வரலாற்று அனுபவங்களிலிருந்து கற்றுத் தேறியவற்றை ஆதாரமாகக் கொண்டே கெரில்லாப் போரியல் வடிவத்தை தேர்ந்தெடுத்தார் பிரபாகரன்.ஒரு நவீன அரசின் ஒழுங்கமைவான இராணுவ பலத்தை, பலம் குறைந்த ஒரு சிறிய ஒடுக்கப்படும் இனம் எதிர்கொண்டு போராடுவதாயின் கெரில்லா வடிவப் போரியல் முறையே மிகப் பொருத்தமானது என அவர் முடிவு செய்தார்.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கத்தின் ஆயுதக் கிளர்ச்சி சந்தித்த படுதோல்வியானது புரட்சிக் கலை சம்பந்தமாக ஒப்பற்ற பாடங்களை பிரபாகரனுக்குப் புகட்டியிருந்தது. உலகத்தின் வேறு பகுதிகளில் வெற்றியீட்டிய விடுதலைப் போராட்டங்களையும் அவற்றின் போரனுபவத்திலிருந்து வகுக்கப்பட்ட போரியல் கோட்பாடுகளையும் உத்திகளையும் கண்மூடித்தனமாக இலங்கையின் புறநிலைகளுக்கு நடைமுறைப்படுத்த முடியாதென்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். எமது சூழ்நிலையில் நிலவும் உள்ளூர் கள யதார்த்தம் மற்றும் அரசியல் வரலாற்றுப் புறநிலைகள் கவனத்துக்குக் கொள்ளப்பட்ட வேண்டும். ஆயுதங்களைக் கையாளுவதற்கான பயிற்சியும் மற்றும் போரியல் முறைகளும் தெரிந்திருப்பதன் அவசியத்தையும் அவர் உணர்ந்திருந்தார். எழுபதுகளின் ஆரம்பத்தில் புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டபோதும் தமது போராளிகளுக்கு தகுந்த பயிற்சி அளிப்பதிலும் தமிழ்ப் பகுதிகளில் தலைமறைவு அலகுகளை அமைப்பதிலும் பிரபாகரன் நீண்ட காலத்தை ஒதுக்கினார். வெளிநாடுகளில் ஆயுதப் பயிற்சி பெறுவதை அவர் விரும்பவில்லை. லெபனானில் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் ஆதரவின் கீழ் ஆயுதப் பயிற்சிக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டபோது அதனை பிரபாகரன் நிராகரித்து விட்டார். உள்ளூர் களத்திலேயே போராட்டத்துக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதால் அக் களத்திலேயே பயிற்சியை அளிப்பது சாலச் சிறந்தது என அவர் கருதினார். பொருத்தமான உத்திகளையும் நன்கு சிந்தித்து, செம்மையாகத் திட்டமிடப்பட்ட தந்திரோபாய போர் நடவடிக்கைகளையே பிரபாகரன் வலியுறுத்துவார். உணர்ச்சிவசப்பட்டு, முரட்டுத் துணிச்சலோடு சாதனை புரிந்து காட்ட வேண்டுமென அவசரப்பட்டுச் செயற்படுவதை அவர் அறவே விரும்பவில்லை. புலிகள் இயக்கம் தோன்றிய ஆரம்ப காலத்திலிருந்தே போராளிகளதும் அமைப்பினதும் பாதுகாப்பில் அவர்மிகவும் அக்கறை கொண்டிருந்தார். அரச காவல்துறையினர், உளவாளிகள், காட்டிக் கொடுக்கும் துரோகிகள் ஆகியோருக்கு எதிராக ஆரம்பத்திலிருந்தே ஆயுத வன்முறைத் தாக்குதல்களை நடத்தியபோதும் இயக்கத்தின் இருப்பை பல வருடங்களாக இரகசியமாகவே வைத்திருந்தார் பிரபாகரன். தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட சில ஆயுத வன்முறை நடவடிக்கைகளுக்கு 1978 ஏப்ரல் 25 அன்றே விடுதலைப்புலிகள் இயக்கம் உரிமைகோரியது.



> பொருத்தமான உத்திகளையும் நன்கு சிந்தித்து, செம்மையாகத் திட்டமிடப்பட்ட தந்திரோபாய போர் நடவடிக்கைகளையே பிரபாகரன் வலியுறுத்துவார். உணர்ச்சிவசப்பட்டு, முரட்டுத் துணிச்சலோடு சாதனை புரிந்து காட்ட வேண்டுமென அவசரப்பட்டுச் செயற்படுவதை அவர் அறவே விரும்பவில்லை. புலிகள் இயக்கம் தோன்றிய ஆரம்ப காலத்திலிருந்தே போராளிகளதும் அமைப்பினதும் பாதுகாப்பில் அவர் மிகவும் அக்கறை கொண்டிருந்தார். அரச காவல்துறையினர், உளவாளிகள், காட்டிக் கொடுக்கும் துரோகிகள் ஆகியோருக்கு எதிராக ஆரம்பத்திலிருந்தே ஆயுத வன்முறைத் தாக்குதல்களை நடத்தியபோதும் இயக்கத்தின் இருப்பை பல வருடங்களாக இரகசியமாகவே வைத்திருந்தார் பிரபாகரன்.

விடுதலைப் புலிகளது கெரில்லா முறையிலான ஆயுதப் போராட்டத்தின் தோற்றமானது, தமிழரது தேசிய போராட்டத்தில் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தியது. மக்கள் ஆதரவு பெற்ற ஆயுதப் போராட்டமாக அதன் பரிமாணம் விரிவடைந்தது. அரசியல் இராணுவக் கட்டமைப்புக்களைக் கொண்ட விடுதலை இயக்கமாக விரைவில் புலிகள் இயக்கம் உருவகம் பெற்றது. சாத்வீக அரசியல் போராட்டங்களில் நம்பிக்கை தளர்ந்து, ஆயுதப் போராட்டம் வாயிலாக அரச அடக்குமுறையை எதிர்க்க வேண்டுமென விரும்பிய தமிழ் இளம் புரட்சிவாதிகளின் அபிலாஷைகளுக்கு புத்துயிர் ஊட்டும் வகையில் புலிகள் இயக்கத்தின் கட்டமைப்பும் செயற்பாடும் அமையப் பெற்றன. மிகவும் நுட்பமான முறையில் போர்த் திட்டங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்து, எதிரியை வியக்கச் செய்யும் வகையில் அவற்றை நடைமுறைப் படுத்திய பிரபாகரன், விரைவிலே தமிழரின் ஆயுதம் தரித்த விடுதலைப் போரின் நம்பிக்கை நட்சத்திரமாக மாறினார். அவர் கட்டியெழுப்பிய விடுதலை புலிகள் அமைப்பும் தமிழரின் தேச சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் புரட்சி இயக்கமாக முகிழ்ந்தது.

(தொடரும்...)

# அரச பாடசாலை செயற்றிட்டத்தின்கீழ் முன்பள்ளிகளை உள்வாங்கத் திட்டம்

## அரசின் ஆலோசனையில் என்கிறார் இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, டிசெ.29

அரச பாடசாலை செயற்றிட்டத்தின் கீழ் முன்பள்ளிகளை உள்வாங்கி அவற்றை ஒரு முறையான செயற்றிட்டத்தின் கீழ் சீரமைக்க அரசு கலந்தாலோசித்து வருவதாக மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் அலிகார் தேசியக் கல்லூரியில் திங்கட்கிழமை இடம்பெற்ற முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த பூர்த்தி மற்றும் 'மின்மினிப் பூங்கா' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கி வழி நடத்தக்கூடிய சிறந்த சமூகத்தைத் தயாரிப்பதே சிறந்த முன்பள்ளிகள் தேவை. வசதி படைத்தவர்கள் மாத்திரம் தான் தங்களது பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு அனுப்ப முடியும் என்ற போக்கு மாற வேண்டும்.

பாலர் பாடசாலை ஆசிரியர்கள் சிலர் முறையான பயிற்சியின்றி காணப்படுகின்றனர்.

எனவே பாலர் பாடசாலைகளில் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்களா என்பது பற்றி சிந்தித்து தமது பிள்ளைகளை பெற்றோர் முன்பள்ளிகளில் அனுமதிக்க வேண்டும்.

இதே வேளை ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் ஆரம்பக் கல்வி முதலே மேற்கொள்ளப்பட வேண்டும்." -என்றார். (எ)

# ரயில் போக்குவரத்தை மேம்படுத்த 2017 இல் பல்வேறு திட்டங்கள்

கொழும்பு, டிசெ.29

ரயில் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக அடுத்த ஆண்டில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று ரயில்வே பொது முகாமையாளர் பீ.ஏ.பி ஆரியரட்ண தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"ரயில் மூலம் பொருள்களை எடுத்துச் செல்வது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. தற்போது திருகோணமலையில் இருந்து மாஹோவரை ரயில் மூலம் நிலக்கரி எடுத்துச் செல்லப்படுகிறது.

பிறீமா கோதுமை மாவை ரயில் மூலம் எடுத்துச் செல்வதற்கான ஒப்பந்தத்திலும் ரயில்வே திணைக்களம் கைச்சாத்திட இருக்கிறது.

மேலும், எரிபொருளும் அதிகளவில் எடுத்துச் செல்லப்பட இருக்கிறது. இந்தியாவின் கடனுதவியுடன் 30 எண்ணெய்த் தாங்கிகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன. பொருள்களை எடுத்துச் செல்வதன் மூலம் கூடுதலான வருமானத்தை ஈட்டுவது இதன் நோக்கமாகும்.

இதேவேளை, புதிதாக ஒன்பது பவர் செட்களும், 12 இஞ்சின்களும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன."-என்றார். (எ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை மலையகப் பகுதியில் அதிகரிப்பு

நுவரெலியா, டிசெ.29

மலையகப் பகுதியைப் பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகையில் கடந்த 20 ஆம் திகதி முதல் சுற்றுலாப் பயணிகள் மலையகப் பகுதியை பார்வையிடுவதற்காக அதிகளவில் வருகை தந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

நுவரெலியா, அக்கல, ஹப்புத்தளை, பண்டாரவளை, சீதாயம்மன் ஆலயம் ஆகிய பகுதிகளில் வெளிநாட்டு, உள்நாட்டுப் பயணிகள் அதிகமானோர் வருகை தருகின்றனர். இதனால் அந்தப் பிரதேச வீதிகளில் வாகன நெரிசல் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 4 ஆயிரம் சிகரெட்டுக்களுடன், நீர்கொழும்புப் பகுதியில் ஒருவர், ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். (எ)

# தினசரி ராசி பலன் 29.12.2016

| | |
|---|---|
| சுபநேரம் | : காலை : 10.45 – 11.45 |
| | மாலை : 12.15 – 1.15 |
| ராகு காலம் | : 1.30 – 3.00 |
| குளிகன் | : 9.00 – 10.30 |
| எமகண்டம் | : 6.00 – 7.30 |

ஜோதிட ஜோதி P.ராமன் பட்டாச்சாரியார்
ஸ்ரீ ஜெய மாருதி ஜோதிட நிலையம்
கும்பகோணம், தமிழ்நாடு.
(maruthi_jaya2003@yahoo.co.in)

கீழ் நோக்கு நாள்

**மேஷம்:** வெற்றி - செய்யும் காரியங்களில் மேன்மை தந்து வெற்றி நல்கும் நன்னாள்.

**ரிஷபம்:** நலம் - இன்று உங்களுக்கு சந்திராஷ்டமம் என்பதால் வீண் அலைச்சல்களை குறைத்துக்கொண்டு மனதின் மற்றும் உடல் நலத்தில் கவனம் செலுத்தும் நாள். சந்திராஷ்டமம் : ரோகிணி, மிருகசீரிடம் 1,2ஆம் பாதங்கள்.

**மிதுனம்:** பாசம் - அன்பானவர்களின் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**கடகம்** : செலவு - இன்று திடீர் செலவீனங்கள் ஏற்படும் நாள்.

**சிம்மம்** :ஆதரவு - இன்று உறவினர்களாலும், அந்நியர்களாலும் ஆதரவு கிடைக்கும் நன்னாள்.

**கன்னி:** பெருமை - இன்று திடீர் புகழாரம் தங்கள் வாசல் நாடி வரும் நன்னாள்.

**துலாம்:** கஷ்டம் - சோம்பலினால் சுகம் குறையும், மகிழ்ச்சி குறையும், முயற்சித்தால் நலம் தரும் நாள்.

**விருச்சிகம்:** ஜெயம் - நல்முயற்சிகள் சிறக்கும் , எடுக்கும் காரியத்தில் கீர்த்தி தரும் சிறப்பான நன்னாள்.

**தனுசு:** உதவி - உங்களுக்கு மற்றவர்களால் உதவியும், உங்களால் மற்றவர்களுக்கு உதவும் எண்ணங்களும் உதயமாகும் நன்னாள்.

**மகரம்:** பணிவு - உறவினர்களிடமும் நண்பர்களிடமும் பணிவுடன் செயற்பட்டு செயல்களை நிறைவேற்றும் நாள்.

**கும்பம்:** மகிழ்ச்சி - மன உளைச்சல்கள் குறைந்து குடும்பத்தில் குதூகலம் தரும் நன்னாள்.

**மீனம்:** தடங்கல் - உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு காரியத்தில் தடங்கல் ஏற்படும்.

# 2017 ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்

'எண்கள் எதையும் செய்யும்'
2017ஆம் ஆண்டுக்கான எண்கணித பலன்கள்
அன்பான வாசகர்களே, பிறந்த திகதி தெரியாதவர்கள் தங்களது ஆங்கிலப் பெயரின் முதல் எழுத்தின் அடிப்படையிலும் கீழ்க்கண்டவாறு பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.


## பொதுப்பலன்

இந்த ஆண்டு தன்பலம் தனக்கே தெரியும் என்பதுபோல ஒவ்வொருவரும் மிக உத்வேகமாக தனது பணிகளை கவனிக்க துவங்கவிருப்பதால் உற்பத்தித்துறை மிகப்பெரிய அளவில் முன்னேற்றம் பெறும். அரசாங்கத்தின் ஆதரவு மிக அதிகமாக வந்து குவியும் மக்களுக்கு. கால்நடைகள் அதிகரிக்கும். நில விற்பனை பெருகும். சாதாரண பதவியில் இருப்போர் தமது விடாமுயற்சியால் நம்பமுடியாத ஏற்றங்களை அடைவர். கண்சம்பந்தமான நோய்கள் பலருக்கு வரலாம். இதற்கான முன்னெச்சரிக்கை அவசியம். அதிகளவில் துன்புறுத்தி வந்த நோய்கள் அகன்றுவிடும். ஆசாரமாக நடந்து ஆண்டவன் பற்றுடையவர்கள் அதிக அளவில் ஆனந்தமான வாழ்வை பெறுவர். பொதுப்பணிகளில் மிகுந்த ஆர்வம் கொண்டபவர் அரசாங்க திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் அதிகமான உதவிகரமாக இருப்பதால் மக்கள் கூடுதல் பலன்களை பெற்று மகிழ்வர். குறிப்பாக உலகத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நாடுகள் வெற்றிமேல் வெற்றி பெறும். பொருளாதார ஏற்றத்தை அள்ளிக் குவிக்கும். நாட்டின் தலைவர்கள் உலக மத்தியில் போற்றப்படும் அளவுக்கு அரசின் திட்டங்களை வகுத்து செயற்படுவர். இந்த ஆண்டின் துவக்கம் 1ஆம் எண்ணிலும், ஞாயிறு அன்று துவங்குவதாலும், 1.1.2017 இன் கூட்டு எண் 3–ஆக வருவதாலும், எல்லா இடங்களிலும் நீதி, நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு மிகுந்து காணப்படுவதால் தேசத்தில் விரோதத்தை ஏற்படுத்துவோர் பெரும் பின்னடைவைச் சந்திக்க நேரிடும். நாட்டின் பெயர் எண் 1ஆக வரும் நாடுகளும், 3ஆம் எண்ணைக் கொண்ட நாடுகளும் உலக மத்தியில் பெரும் செல்வாக்கை நிலை நாட்டும்.

மேலும் இந்தியாவின் பொருளாதார ஏற்றம் வானளவில் உயரும். இரும்பு, பெற்றோலிய உற்பத்தி, புடைவைத் தொழில், மருந்து, மருத்துவ நிலையங்கள், கல்வி, அரசாட்சி கொடி கட்டிப் பறக்கும். மொத்தத்தில் நல்லாட்சியாளர்களின் நிலை நினைத்துப் பார்த்திராத அளவுக்கு உயர்ந்திடும்.


## எண் 3

- 3,12,21,30 திகதிகளில் பிறந்தவர்களுக்கும், பெயரின் முதல் எழுத்தாக C, G, L, S-ஐ பெற்றவர்களுக்கும், பெயர் எண் 3 என அமைந்தவர்களுக்கும் வரும் ஆண்டு உயர்வுகளை உடனடியாக பெற வாய்ப்புள்ளது. பிரபலமானவர்களின் நட்பு அதிகமான ஆதாயத்தை தேடித்தரும்.
- எடுத்த முயற்சிகளில் எல்லாம் பணம், நண்பர்களால் உதவி, வெளிநாட்டு பண வருகை என பொருளாதாரம் உயர்ந்து நிற்கும்.
- தாய் தந்தையர் ஒப்புதலுடன் நினைத்தது போல் நல்வாழ்க்கை அமைந்திடும் இளசுகளுக்கு.
- ஒவ்வாமை நோயிலிருந்து விடுபடுவர். நீரிழிவு வியாதிகளும் விடைபெற்று ஓடும். இதனால் மகிழ்வு உண்டு.
- நண்பர்களால் புதிய ஒப்பந்தங்கள் ஏற்பட்டு, வெகுவான பணவரவிற்கு வழிகாட்டும். திடீர் பண வருகையும் மகிழ்வைத் தரும்.
- நகைக்கடை, இரும்பு, மருந்து, சைவ உணவகங்கள் மூலம் அதிக ஆதாயம் பெறலாம் வியாபாரிகள்.
- கேட்ட கடன் தொகைகள் வரப்பெற்று வாழ்வின் தரத்தை உயர்த்திக் கொள்வர் பணியில் இருப்பவர்கள்.
- திடீரென ஏற்படும் அரசியல் மாற்றங்கள் பெருமைக்குரிய பதவிகளை தந்து அலங்கரிக்கும் அரசியல்வாதிகளை.
- புதுப்புது ஒப்பந்தங்களால் புகழும் பணமும் அதிகமாக வந்து ஆச்சரியத்தை ஏற்படுத்தும் கலைஞர்களுக்கு.
- கடன்கள் எல்லாம் கழிந்து வாழ்வின் தரத்தை வெகுவாக பெறுவதுடன் விளைச்சலையும் அதிகம் பெறுவர் விவசாயிகள்.
- புகுந்த வீட்டில் பெரியவர்களால் புகழ் பெறுவதுடன் கணவரின் கனிவும் பெற்று மகிழ்ச்சியில் திளைப்பர் மகளிர்.
- யதார்த்தமான உழைப்பில் மிக அதிகமான மதிப்பெண்களை குவித்து அனைவரிடமும் மதிப்பு பெறுவர் மாணவர்கள்.



கலாநிதி ஜே.என்.என்.செல்வன் Ph.D.,
எண் கணித ஆலோசகர்
வாஸ்து நிபுணர், நிலத்தடி நீர் நிபுணர்.
Email : jnsnumerro@yahoo.co.in

# அல்லாரை தும்புத் தொழிற்சாலை பணியாளர்களுடன் கலந்துரையாடல்









சாவகச்சேரி.டிசெ.29

சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட அல்லாரை தும்புப் பொருள்கள் உற்பத்திப் பண்ணையை நேற்று முன் தினம் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனும் மாகாணசபை உறுப்பினர் கே. சயந்தனும் சென்று பார்வையிட்டனர்.

அவர்கள் கைத்தொழில் பேட்டையில் பணிபுரியும் பணியாளர்களின் தேவைகள் மற்றும் தொழிற்பாடுகள் குறித்து கலந்துரையாடி கேட்டறிந்து கொண்டனர்.

தும்பு அடிக்கும் இயந்திரம் மற்றும் ஒரு சில அத்தியாவசிய உபகரணங்கள் என்பவற்றை அடுத்த ஆண்டின் நிதி மூலகங்களினூடாகப் புனரமைப்புச் செய்து நல்ல முறையில் இயங்க வைப்பது தொடர்பாகவும், அப்பகுதியில் உள்ள வறிய குடும்பங்களை வாழ்வாதாரத்தில் ஊக்குவிப்பது குறித்தும் அவர்கள் கலந்துரையாடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## ஜனாதிபதியுடன் டிலானி...



*சமூக வலுவூட்டல் மற்றும் நலன் நோன்பு அமைச்சின் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் சமூக அபிவிருத்திப் பிரிவின்மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட சமுர்த்தி 'கெகுலு' சிறுவர் கழகத் தேசிய கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகளில் 10 வயதுப் பிரிவு அறிவிப்பாளர் போட்டியில் மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மனோரஞ்சன் டிலானி முதலாம் இடத்தைப் பெற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ரொக்கப்பணம், பதக்கம், சான்றிதழும் பெற்றுக் கொண்டு அவருடன் காணப்படுகின்றார். (இ-31)*

# சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய ஒளிவிழா நிகழ்வில் வாழ்வாதார உதவிகள்







சாவகச்சேரி புனித லிகோரியார் ஆலய ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கச்சாய் வீதி லிகோரியார் ஆலய முன்றிலில் இடம்பெற்றது. சாவகச்சேரி தம்புதோட்டம் 523வது படையணியினரின் அனுசரணையில் இடம்பெற்ற இவ் விழாவில் புனித பிரான்ஸிஸ் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினர்களாக 523வது படையணி தளபதி திசநாயக்க,52வது படைப்பிரிவு அதிகாரி வன்னியாராச்சி, மதகுருமார்கள், சாவகச்சேரி நகர சபை செயலாளர், முன்னாள் தவிசாளர், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் தென்மராட்சி பாடசாலை மாணவர்கள், புனித லிகோரியார் பங்கு மக்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் 523வது படையணியினரின் ஏற்பாட்டில் ஜே/301 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 4பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வாழ்வாதார உதவிகளை படைத் தளபதிகளான வன்னியாராச்சி மற்றும் திசநாயக்க வழங்கினர். நிகழ்வில் பொதுமக்கள், படையினர் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு படையினரால் இரவு உணவும் வழங்கப்பட்டது. (இ-21)

## 'ஞானச்சுடர்' சஞ்சிகை நாளை வெளியீடு

வடமராட்சி,டிசெ.29

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மீகச் சஞ்சிகையான மார்கழி மாத இதழ் வெளியீட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை கிராம சேவையாளர் சோ.பரமநாதனும் வெளியீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் இரா. செல்வவடிவேலும் நிகழ்த்துவார்கள். (இ-30)





உயர் தேசிய தொழில்நுட்பக் கல்லூரியின் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவம் அண்மையில் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். (இ-21)

# சசிகலா தலைமையை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம்!




சென்னை, டிசெ.29

தமிழகத்துக்கும், அ.தி.மு.க.வுக்கும் சசிகலா தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சசிகலாவின் தலைமைத்துவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சட்டப் பஞ்சாயத்து இயக்கம் சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று நேற்று முன்தினம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உண்ணாவிரதத்தில் சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

இப்போராட்டத்துக்கு தலைமை வகித்த சட்டப் பஞ்சாயத்து இயக்கத் தலைவர், பொதுச் செயலாளர் செந்தில் ஆகியோர் தெரிவித்தவை வருமாறு:-

காமராஜரும், அண்ணாவும் அலங்கரித்த முதல்வர் பதவியில் விரைவில் சசிகலா அமர்வதற்கான அறிகுறிகள் பலமாகத் தென்படுகின்றன.

ஆளுங்கட்சியின் முன்னணி நிர்வாகிகளே சசிகலா தலைமைதாங்க வரும்படி கோரி வருவதை தினமும் பார்க்கிறோம்.


சென்னையில்இன்று நடைபெறவுள்ள அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் சசிகலா அக்கட்சியின் பொதுச் செயலாளராக அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுங்கட்சிக்கும், ஆட்சிக்கும் சசிகலா தலைமை ஏற்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்ற மாயை கட்டமைக்கப்பட்டு வருகிறது.

ஆனால், உண்மை இதுவல்ல. கோடிக்கணக்கான மக்கள் குமுறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பொதுமக்கள், சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், கட்சிகளின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், ஒருமுகப்படுத்துவதற்காகவும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளோம். இதையொட்டி கையெழுத்து இயக்கத்தையும் தொடங்கியிருக்கிறோம்.

சசிகலா தலைமையை எதிர்க்கும் ஒவ்வொருவரும் இப்போராட்டத்தில் ஒரு மணி நேரமாவது கலந்துகொண்டு கையெழுத்திட்டு ஆதரவு தெரிவிக்கக் கோருகிறோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

## கான்பூரில் ரயில் புரண்டு 2 பேர் பலி; காயம் 26!



கான்பூர், டிசெ.29

கான்பூரில் பயணிகள் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 2 பேர் பலியாகினர். 26 பேர் காயமடைந்தனர்.

இது குறித்து இந்திய ரயில்வே அமைச்சகம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

"உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரின் ரூரா ரயில் நிலையத்தின் அருகே நேற்றுக் காலை 6 மணியளவில் 13 ரயில் பெட்டிகளைக் கொண்ட அஜ்மீர் - சீல்டா பயணிகள் விரைவு ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் 2 பேர் பலியாகினர். மேலும், 26 பேர் காயமடைந்தனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

காயமடைந்தவர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன. மருத்துவர்கள் அனைவரையும் பரிசோதித்து வருகின்றனர்.

விபத்து ஏற்பட்ட ரயிலில் பயணித்த பயணிகளுக்கு மாற்று ரயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பழைய தாள்களை வைத்திருந்தால் சிறை

சண்டிகார், டிசெ.29

மதிப்பு நீக்கம் செய்யப்பட்ட 500 மற்றும் 1000 ரூபா தாள்களை கையில் வைத்திருப்போருக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்க அவசரச் சட்டம் நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்த நடைமுறை எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்குப் பின்னர் அமுலுக்கு வரவுள்ளது.

நேற்றுக் காலை நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மோடி கடந்த நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அன்று புழக்கத்தில் உள்ள பழைய 500 மற்றும் 1000 ரூபா தாள்கள் செல்லாது என்று அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பணத் தட்டுப்பாடு நீடித்தால் மோடி பதவி விலகவேண்டும்

### மம்தா, ராகுல் வலியுறுத்தல்




டில்லி, டிசெ.29

பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், 50 நாட்களுக்குள் சீராகவில்லை என்றால், பிரதமர் நரேந்திர மோடி பதவியை ராஜினாமாச் செய்வாரா? என காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தியும், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜியும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ராகுல்காந்தி, மம்தா உள்ளிட்டோர் கூட்டாக இணைந்து ஊடகங்களுக்குப் பேட்டி அளித்துள்ளனர். இது தொடர்பில் ராகுல் காந்தி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பண மதிப்பு நீக்க நடவடிக்கை எனும் தன்னிச்சையான பொருளாதாரப் பரிசோதனை முயற்சியை உலக வரலாற்றில் முதல்முறையாகப் பிரதமர் மோடி மேற்கொண்டுள்ளார்.

இதுபோன்ற பரிசோதனையை சீனாவில் மாவோ ஆட்சிக்காலத்தில் கூடச் செய்யவில்லை. மத்திய அரசின் இந்நடவடிக்கை, கறுப்புப் பணத்தின் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக நாட்டு மக்களின் பொருளாதார சுதந்திரத்தை பறித்துவிட்டது. தோல்விக்குப் பொறுப்பேற்று பிரதமர் நரேந்திர மோடி பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# சசிகலாவுக்கு வாய்ப்பு இல்லையாம்!

## பொதுச் செயலாளர் தேர்தல் மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார் என்கின்றன அ.தி.மு.க. வட்டாரங்கள்



டில்லி, டிசெ.28

அ.தி.மு.க கட்சி விதிகளின் படி பொதுச்செயலாளர்பதவியை தேர்தல் மூலமே நிரப்ப முடியும் என்பதால் சென்னையில் இன்று இடம்பெறும் பொதுக்குழுக் கூட்டத்தில், சசிகலாவைப் பொதுச் செயலாளராக தேர்வு செய்ய வாய்ப்பில்லை என அ.தி.மு.க.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர், அ.தி.மு.க. செயற்குழு, பொதுக்குழுக் கூட்டம் சென்னையில் இன்று இடம்பெறுகிறது. இதில் சசிகலா பொதுச் செயலாளராக அறிவிக்கப்படுவார் என்ற தகவல் வெளியாகி வருகிறது. ஆனால், கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் பொதுச் செயலாளரை முடிவு செய்து அறிவிக்க முடியாது என்பதே அ.தி.மு.க. மூத்த நிர்வாகிகளின் கருத்தாக உள்ளது.

இதுகுறித்து அ.தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.க. பொதுக் குழுக் கூட்டம் என்பது ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படும். அப்போது, கட்சியின் வரவு - செலவு அறிக்கை தாக்கல் செய்யப்படும். மேலும், பொதுச் செயலாளர் எடுத்த நடவடிக்கைகளுக்கு ஒப்புதல், இதர உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தீர்மானங்களும் நிறைவேற்றப்படும்.

அ.தி.மு.க. விதிமுறைகளின் படி, பொதுச்செயலாளர் பதவி என்பது தொண்டர்களால் தேர்வு செய்யப்படும் பதவி. இப்பதவிக்கான தேர்தல் முறையாக அறிவிக்கப்பட்டு, தேர்தல் அதிகாரியாக ஒருவரை கட்சித் தலைமை நியமிக்கும்.

போட்டி இல்லை என்றால், யாருக்காக மனு செய்யப்பட்டுள்ளதோ அவர் பொதுச் செயலாளராக அறிவிக்கப்படுவார்.

தேர்தல் நடைமுறைகள், போட்டியின்றி பொதுச்செயலாளர் தேர்வு உள்ளிட்ட விவரங்கள் தேர்தல் ஆணையத்துக்கு அளிக்கப்படும். அதன் அடிப்படையில், அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் சார்பில் வேட்பாளரை அறிவிக்கவும் அவருக்கு கட்சிச்சின்னத்தை வழங்கவும் பொதுச் செயலாளருக்கு தேர்தல் ஆணையம் அதிகாரம் வழங்கும்.

நிலைமை இப்படி இருக்கும் போது, தீர்மானம் நிறைவேற்றி பதவியை சசிகலாவிடம் கொடுப்பதன் மூலமோ, பொதுக்குழுவைக் கூட்டுவது மூலமோ அவர் பொதுச் செயலாளர் பதவியை பெற முடியாது.

கடந்த காலங்களில் தேர்தலில் ஜெயலலிதாவுக்கு எதிராக யாரும் போட்டியிட முயற்சி செய்யவில்லை. ஆனாலும், தேர்தல் முறையாக அறிவிக்கப்பட்டது. கட்சி நிர்வாகிகள் பலரும் ஜெயலலிதா பெயரிலேயே மனு செய்தனர். அதன்படி, அவர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். ஆனால், தற்போதைய நிலை யில் தேர்தல் அறிவிக்கப்பட்டால் சசிகலாவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் மனுத் தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது.

மனுவை பெற மறுத்தால் நீதிமன்றம் மூலம் தேர்தல் நடத்த அதிருப்தியாளர்கள் முயற்சி எடுப்பர் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



## விபத்துக்குள்ளான ரஷ்ய விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்பு

மொஸ்கோ, டிசெ.29

சிரியா நோக்கிச் சென்ற போது அண்மையில் கருங்கடலில் 92 பேருடன் விபத்தில் சிக்கிய ரஷ்ய இராணுவ விமானத்தின் பிரதான கறுப்புப் பெட்டி நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரையில் இருந்து ஆயிரத்து 600 மீற்றர்கள் தொலைவில் அது கண்டுபிடிக்கப்பட்டு, ஆய்வுக்காக மொஸ்கோவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கருங்கடலில் ஞாயிறன்று காணாமல் போன தமது இராணுவ விமானத்தின் முதல் பதிவு கருவியைக் கண்டுபிடித்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த இரவு மீட்புக் குழு விமானத்தின் சில பகுதிகளைக் கண்டு பிடித்தது. பலியான 92 பேரின் சடலங்களை மீட்பதற்காக பெருந் தேடுதல் நடைபெறுகின்றது. இதுவரை 12 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

## ஒருதொகை போதைப்பொருள் பிலிப்பைன்ஸில் மீட்பு

மணிலா, டிசெ.29

பிலிப்பைன்ஸில் 120 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான போதைப்பொருள் தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

'சபு' என்ற இந்த போதைப் பொருள் அந்த நாட்டு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் கைப்பற்றப்பட்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிலிப்பைன்ஸில் கடந்த ஜூலை மாதம் புதிய ஜனாதிபதியாக ரொட்ரிகோ டியுட்டர் பதவியேற்றுள்ள நிலையில், அந்த நாட்டில் போதைப்பொருளை அழிப்பதே அவரின் பிரதான நோக்கமாகும். இந்நிலையில், கடந்த ஜூலை மாதத்தில் இருந்து இதுவரை போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்ட 6 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (எ)

# இனிமேல் ஒருபோதும் நாம் போர் தொடுக்க மாட்டோம்

## பேர்ள் துறைமுகத் தாக்குதலின் 75 ஆவது ஆண்டு நினைவில் ஜப்பான் பிரதமர் உறுதி



நினைவிடத்தில் ஒபாமா, ஜப்பான் பிரதமர் அஞ்சலி

இனிமேல் ஒரு போதும் போர் தொடுக்க மாட்டோம் என்று உறுதிமொழி அளித்தார் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே.

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள ஜப்பான் பிரதமர் அங்குள்ள ஹவாய் தீவில் உள்ள பேர்ள் துறைமுகப் பகுதியில் அமெரிக்கக் கடற்படைத் தளத்தின் மீது ஜப்பான் தாக்குதல் நடத்திய நினைவு நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இதன் போதே அவர் மேற்கண்ட உறுதி மொழியைத் தெரிவித்தார்.

1939-1945 வரை நடைபெற்ற 2 ஆம் உலகப் போரில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை நேசநாடுகள் என்றும் எதிர் அணியில் அச்சு நாடுகள் என்று அழைக்கப்பட்ட ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவை ஒன்று சேர்ந்து போரிட்டன.

சுமார் 6 ஆண்டுகள் நீடித்த இந்த 2 ஆம் உலகப் போரின் போது, ஹவாய் தீவுகளில் உள்ள அமெரிக்காவின் பேர்ள் துறைமுக கடற்படைத் தளத்தைத் தாக்கத் தனது படைகளுக்கு ஜப்பான் இராணுவத்தளபதி ஜெனரல் டோஜோ உத்தரவிட்டார்.

போர் விதிகளின்படி முறையான முன்கூட்டியே அறிவிப்புச் செய்யாமல் எந்த நாடும் இன்னொரு நாட்டைத் தாக்கக் கூடாது. ஆனால் எச்சரிக்கை செய்தால் அமெரிக்கா உஷார் ஆகிவிடும் என்பதால் எதிர்பாராத திடீர் தாக்குதலை ஜப்பான் விமானப் படைகள் நடத்தின.

27-12-1941 அன்று 350 க்கும் அதிகமான ஜப்பான் போர் விமானங்கள் பயங்கரமான குண்டுகளை வீசி நடத்திய இந்த அதிரடித் தாக்குதலில் 20 க்கும் மேற்பட்ட அமெரிக்கப் போர்க்கப்பல்கள் மற்றும் 300 க்கும் மேற்பட்ட போர்விமானங்கள் சேதமடைந்தன.

அமெரிக்காவைச் சேர்ந்த சுமார் 2ஆயிரத்து 400 வீரர்கள் கொல்லப்பட்டனர். தனது கடற்படைதளத்தைத் தாக்கியதால் கோபம் கொண்ட அமெரிக்கா, ஜப்பானுக்கு எதிரான உக்கட்டப் போருக்கு தயாரானது. ஜப்பானை அடித்து ஒடுக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாகச் செயற்பட்டது.

இதன் எதிரொலியாக ஜப்பானின் நாகசாகி, ஹிரோஷிமா நகர்களின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளை வீசி நடத்திய தாக்குதல், மனிதர்களால் உண்டாக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய பேரழிவாகக் கருதப்படுகிறது. இந்தச் சம்பவத்துக்கு பின்னர் அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைந்தது. 2 ஆம் உலகப் போரும் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் ஹவாய் தீவில் உள்ள பேர்ள் துறைமுகப் பகுதியை ஜப்பான் தாக்கிய நினைவு நாளின் போது அங்கு பலியான 2 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க வீரர்களுக்கு ஆண்டு தோறும் அமெரிக்க அரசின் சார்பில் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

அவ்வகையில், இந்த ஆண்டு அஞ்சலி நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் நேற்று முன்தினம் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பலியான வீரர்களுக்காக எழுப்பப்பட்டுள்ள நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்த ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, 'இதே இடத்தில் 75 ஆண்டுகளுக்கு முன்னர் போரால் பறிக்கப்பட்ட வீரர்-வீராங்கனைகளின் ஆன்மாக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

'இனிமேல் இதே போன்ற போரின் பயங்கரங்கள் தொடரக் கூடாது என்பதை ஜப்பான் நாட்டு மக்களான நாங்கள் உறுதிமொழியாக ஏற்கிறோம்' என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)



இயேசு கிறிஸ்து பிறப்பை தேவதைகள் அறிவித்தன என்று பைபிள் கூறுகிறது. இதை செக் குடியரசின் ஒரு தேவாலயத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. செக் குடியரசின் உஸ்டெக் நகரில் உள்ள செயிண்ட் பீற்றர் ஆண்ட் போல் தேவாலயத்தின் கோபுரத்தின் மேலிருந்து தேவதைகளை போல உடை உடுத்திய 3 பெண்கள் இறங்கி வரும் காட்சியை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து இரசித்தனர். சுமார் 30 மீற்றர் உயரத்திலிருந்து இறக்கப்படும் போது அந்த 3 பெண்களும் எதுவித பயமும் இல்லாமல் இறங்கி வந்தனர்.

## ஓராண்டில் வடகொரியாவிடம் சக்திவாய்ந்த அணு ஆயுதங்கள்

சியோல், டிசெ.29

வட கொரியா அடுத்த வருடத்தின் இறுதியில் சக்தி வாய்ந்த அணு ஆயுதங்களை தம் வசம் வைத்திருக்கும் என்று அந்த நாட்டிலிருந்து தென் கொரியாவுக்கு புலம் பெயர்ந்த சிரேஷ்ட தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தென் கொரியாவுக்குப் புலம்பெயர்ந்ததன் பின்னர் முதல் முறையாக கருத்துத் தெரிவித்துள்ள அந்த அதிகாரி,

'வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், கடந்த மே மாதத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சி மாநாட்டில், அடுத்த வருட இறுதிக்குள் அணு ஆயுதத் தயாரிப்புக்களை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார் எனத் தெரிவித்துள்ளார்.

'மேலும் டிரில்லியன் கணக்கான டொலர் பொருளாதார உதவி மற்றும் ஊக்சுத் தொகை வழங்கும் நடவடிக்கைகள், கிம் ஜாங் உன்னின் அந்த இலட்சியத்தைத் தகர்க்க எந்த வகையிலும் உதவாது' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

## போராட்டத்தில் ஈடுபட்டதால் 1,500 ஊழியர்கள் பணி நீக்கம்

### பங்களாதேஷில் அதிரடி

டாக்கா, டிசெ.29

பங்களாதேஷில் போராட்டத்தில் ஈடுபட்ட 1,500 ஊழியர்கள் பணி நீக்கப்பட்டுள்ளனர்.

பெரியளவில் தொழிற்சங்கப் போராட்டமொன்றில் ஈடுபட்ட சுமார் ஆயிரத்து 500 பணியாளர்கள் பணிநீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பள அதிகரிப்பை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் கடமையாற்றி வரும் ஊழியர்களே இவ்வாறு பணி நீக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை இந்த தொழிற்சங்கப் போராட்டத்தை வழிநடத்திய சில முக்கிய தலைவர்களையும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் ஊழியர்கள் எதிர்நோக்கிவரும் அவலங்கள் தொடர்பில் செய்தி அறிக்கையிட்ட ஊடகவியலாளர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (எ)

# ஐ.எஸ்ஸுக்கு ஆதரவளிக்கிறது அமெரிக்கா!

## துருக்கி ஜனாதிபதி குற்றச்சாட்டு



அங்கரா, டிசெ.29

ஐ.எஸ். அமைப்புக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாகவும், அதற்கான ஆதாரங்கள் உள்ளன என்றும் துருக்கி ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

துருக்கி ஜனாதிபதியான ரசீப் தையிப் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற கூட்டத்தில் அமெரிக்காவின் மீது பகிரங்கக் குற்றச்சாட்டு ஒன்றை கூறியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

'அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் தீவிரவாதத்துக்கு ஆதரவாக உள்ளனர்.

அவர்கள் தீவிரவாதப் படைகளுக்கு ஆதரவு அளித்து வருகின்றனர். அதில் ஐ.எஸ். தீவிரவாதிகள், வை.பி.ஜி. மற்றும் பி.வை.டி.யும் அடங்குகின்றன.

அமெரிக்கா தீவிரவாதிகளுக்கு ஆதரவாக இருப்பதை புகைப்படங்கள் மற்றும் காணொலிகள் தெளிவுபடுத்துகின்றன.

மேலும் அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படைகள் சிரிய ஜனாதிபதியான பஸார் அல் -அஸாத்துக்கு எதிராக கிளர்ச்சியாளர்களை உருவாக்கி வருகின்றன. இதை நாம் முறியடிக்க வேண்டும்.'என்று கூறியுள்ளார். (எ)

# பொதுச் சந்தையில் தீயில் அழிந்த கடைகள்: கிளிநொச்சி வியாபாரிகள் 122 பேருக்கு நேற்று ரூ.7 கோடி 10 லட்சம் நஷ்டஈடு!

## புனர்வாழ்வு அமைச்சர் சுவாமிநாதன் வழங்கினார்



கிளிநொச்சி, டிசெ.29

கடந்த செம்ரெம்பரில் தீயினால் எரிந்து அழிந்து நாசமான கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகளுக்கு நேற்று நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் இதனை வழங்கினார். 122 சந்தை வியாபாரிகளுக்கு 7 கோடி 10 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்டச் செலயகத்திறகு விஜயம் செய்த அவர்கள் அங்கு மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் தீயினால் எரிந்த சந்தை வியாபாரிகளுக்கு நட்டஈட்டை வழங்கினார்.

44 பான்சி கடைகளுக்கும், 53 புடைவைக் கடைகளுக்கும்,22 பழக் கடைகளுக்கும்,2 தையல் கடைகளுக்கும், ஒரு தேநீர் கடைக்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இதில் 15 லட்சம் ரூபா வீதம் 19வியாபாரிகளுக்கும், பத்து லட்சம் ரூபா வீதம் 13 பேருக்கும், ஐந்து லட்சம் ரூபா வீதம் 40 வியாபாரிகளுக்கும் நஷ்டஈடாக வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு ஏனைய வியாபாரிகளுக்கு 3 லட்சம், 2 லட்சத்து 50 ஆயிரம் ஒரு லட்சம் என வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அமைச்சருடன் வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், அரச அதிபர் எஸ். சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளா' பிரபாகரன், கரைச்சி பிரதேச செயலாளர் க.கம்சநாதன், மற்றும் வியாபாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(இ-70)

# பிரபாகரன் இருந்திருந்தால் இன்று அவரே பிரதமர்!

## சந்தை இழப்பீடு வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா

எங்களுடைய விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் இன்று அவர் பிரதமராகியிருப்பார் என சிறுவர், பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த செம்ரெம்பர் மாதம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் தீயினால் எரிந்த வியாபாரிகளுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

வடமராட்சி என்றால் படிப்பில் மிகவும் பெயர் பெற்ற ஓர் இடம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எப்படி இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும். இன்று அவர் இருந்திருந்தால் அரசாங்கத்தில் பிரதமராகவோ, ஓர் உறுப்பினராகவோ இருந்திருக்கலாம். ஆனால் துரதிஷ்டவசமாக அது எங்களுக்கு கிடைக்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்த அழிவை மகிந்த ராஜபக்ஷ முடித்து வைத்தார் என்று இங்கு சில அரசியல்வாதிகள் பேசுகின்றனர். ஆனால் அவ்வாறு இனவாதம் பேசுவதனால் எங்களுக்கு கிடைக்க வேண்டியதும் கிடைக்காது போய்விடும். இப்படி இனவாதம் பேசாது இந்த நல்லாட்சி அரசின் மூலம் எதை பெற்றுக்கொள்ள முடியும் எதை பெற்றுக் கொள்ள முடியாது என்பதை அறிந்து செயற்பட வேண்டும் என்றார்.

தெற்கிலும் சரி வடக்கிலும் சரி இனவாதம் பேசுவதனால் எமது சந்ததிதான் பாதிப் படைகிறது. எமது நல்லாட்சியில் மக்க ளுக்கான நல்ல விடயங்களே இடம்பெற்று வருகின்றன என குறிப்பிட்டார். அவர்.

(இ-70)

### கருத்தரங்கு

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் 2017 ஆம் ஆண்டுக்கான திட்டமிடல் தொடர்பான கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல ஆசிரியர்களையும் சமூகமளிக்குமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ)

### பூநகரியில் கலை விழாவும் நூல் வெளியீடும்

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் ஆறாவது ஆண்டுகலைவிழாவும் 'பூந்துணர்' ஆறாவது நூல் வெளியீடும் பூநகர் பெட்டகம் முதலாவது நூலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9மணிக்குமுழங்காவில் கிருஷ்ணர் கோவில் மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலர் சி.ச. கிருஷ்ணேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெறும் இவ்விழாவில் பூநகரி பிரதேசத்தில் கலைத் தொண்டாற்றிய நால்வர் 'கலை நகரி' விருது வழங்கி கௌரவிக்கப் படவுள்ளார்கள். கா.கார்த்திகேசு, ஜோசப் பிரான்சிஸ், மா.சுப்பிரமணியம், சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் ஆகியோரே அந்த நால்வரும் ஆவர். இளங்கலைஞர் விருது த.கௌரீஸ்வரனுக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜாசெல்வரத்தினம், முழங்காவில் மகாவித்தியாலய அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ)

# பச்சிலைப்பள்ளி நருவில் மயானம் பற்றைகள் வெட்டியழித்து துப்புரவு

பளை, டிசெ.29

மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பச்சிலைப்பள்ளி பிரதேசத்திலுள்ள நருவில் மயானம், சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் பற்றைகள் வெட்டித் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கிளாலியில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட இந்த நருவில் மயானம் பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் கைவிடப்பட்ட நிலையிலுள்ளமையால் மரங்கள் வளர்ந்து பற்றைக் காடாக மாறியிருந்தது. இதனால் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அங்கு செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

மயானத்தின் நிலை குறித்தும் பொதுமக்கள் பல தடவைகள் பிரதேசசபையின் கவனத்துக்குத் தெரியப்படுத்திய போதிலும் நிதி யின்மை காரணமாக மயானம் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்தது.

மயானத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்தும் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய அவசியம் குறித்தும் அப்பகுதி மக்கள் மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தனின் உதவியை நாடியமையை அடுத்து அவர் மாகாணசபை நிதியிலிருந்து 75 ஆயிரம் ரூபாவை மயானத்துக்காக ஒதுக்கியிருந்தார்.

தற்பொழுது முதற்கட்டமாக இந்த நிதி மூலம் மயானத்திலுள்ள பற்றைகள், மரங்கள் அழிக்கப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

(இ-59)

# வவுனியா கற்பகபுரம் மக்களின் காணிகளுக்கு உறுதிப் பத்திரங்கள்



வவுனியா, டிசெ.29

வவுனியா, கற்பகபுரம் கிராமத்தைச் சேர்ந்த 370 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற, புனர்வாழ்வு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் காணி உறுதிப்பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

வவுனியா, கற்பகபுரம் ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வின் போதே இவை வழங்கப்பட்டன.

கற்பகபுரம் கிராமத்தில் குடியிருந்த மக்கள் கடந்த காலப் போர் காரணமாக இந்திய மற்றும் அயல் பிரதேசங்களை நோக்கி இடம் பெயர்ந்திருந்தனர். இந்த நிலையில் 2010 ஆம் ஆண்டு முதல் மீள்குடியேறியிருந்தனர். எனினும் அவர்களது காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. இந்த நிலையிலேயே அவர்கள் தமது காணிகளில் குடியேறியிருந்தனர். இந்த நிலையில் காணியற்ற மக்களுக்கும் அந்தப்பகுதியில் காணிகள் வழங்கப்பட்டிருந்தன.

இதேவேளை அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்குமாறு தொடர்ச்சியாகக் கோரி வந்தனர். இந்தநிலையில் மீள்குடியேற்ற, புனர்வாழ்வு மற்றும் இந்து விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

இதன்போது அந்தப் பகுதி மக்கள், தமது கிராமத்துக்கான வீட்டுத் திட்டம், உள்ளக வீதிப் புனரமைப்பு, பாடசாலை அபிவிருத்தி தொடர்பில் அமைச்சர்கவனம்செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.


இந்தநிகழ்வில் வர்த்தகக் கைத்தொழில் அமைச்சரின் இணைப்பாளர் முத்து முகமது, வவுனியா நகரசபை முன்னாள் உறுப்பினர் அப்துல்பாரி, ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட இணைப்பாளர் கருணாதாச, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, சிறி ரெலோ கட்சியின் இணைப் பாளர் ஜனகன், கிராம ஆர்வலர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-100)

# தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி: 205 ஓட்டங்களுக்குள் சுருண்டது இலங்கை

போர்ட் எலிசபெத், டிசெ.29

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 205 ஓட்டங்களுக்குள் சுருண்டது.



இலங்கை - தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் நேற்றுமுன்தினம் போர்ட் எலிசபெத் மைதானத்தில் ஆரம்பமாகியது.

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது டெஸ்டின் முதல் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல்நாள் ஆட்ட நேரமுடிவில் ஹொாக் 25 ஓட்டங்களுடனும் பிலேண்டர் 6 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

முதல் டெஸ்ட்டின் இரண்டாம் நாள் போட்டி ஆரம்பமாகிய போது தென்னாபிரிக்க அணி தனது மிகுதி ஆட்டத்தைத் தொடங்கியது. ஹொாக் 37 ஓட்டங்களையும், பிலேண்டர் 13 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்க அடுத்து வந்த மகாராஜ் மற்றும் அபொட் ஆகியோர் ஓட்டங்கள் எவையும் பெறாமல் வெளியேறினர். இதனால் தென்னாபிரிக்க அணி தனது முதல் இன்னிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது.

நேற்று முன்தினம் இலங்கை அணியில் லக்மால் 1-விக்கெட்டையும் பிரதீப் 2 விக்கெட்டுக்களையும் பறித்தனர்.

தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்குவதற்கு இலங்கை அணியில் கருணாரட்ண மற்றும் சில்வா ஆகியோர் களமிறங்கினர்.

கருணாரட்ண 10 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்று அபோட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பெரேரா 13 பந்துகளை எதிர்கொண்டு 7 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பிலேண்டரின் பந்துவீச்சில் ஹொக்கிடம் பிடிகொடுத்தார். அவரது இடத்தை நிரப்ப வந்த மெண்டிஸை அபொட் ஓட்டங்கள் எவையும் பெறவிடாமல் வெளியேற்றினார்.

ஆரம்பம் முதல் நிதானமாக ஆடிவந்த சில்வா 59 பந்துகளுக்கு முகம் கொடுத்து 16 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை பிலேண்டரின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ ஆனார். தொடர்ந்து விளையாடிய மத்யூஸ் 39 ஓட்டங்களையும், சந்திமால் 28 ஓட்டங்களையும், ஹேரத் 24 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் பிலேண்டர் 3 விக்கெட்டுக்களையும், அபொட் 2 விக் கெட்டுக்களையும், றபாடா, மகாராஜ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இருள் காரணமாக 57 ஓவர்களில் நேற்று முன்தினம் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

ஆட்ட நேர முடிவில் டி. சில்வா 43 ஓட்டங்களுடனும் சமீர 7 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. இருவரும் ஆட்டத்தை தொடர்ந்தனர். டி சில்வா 43 ஓட்டங்களில் வெளியேறினார். சமீரா 19 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார். 10 ஆவது வீரராக களம் இறங்கிய லக்மல் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 205 ஓட்டங்களில் சுருண்டது.

தென்னாபிரிக்க அணி சார்பில் பிலேண்டர் 5 விக்கெட்டுகளும், அப்போட் 3 விக்கெட்களையும் வீழ்த்தினார்கள். 81 ஓட்டங்கள் முன்னிலையுடன் தென்னாபிரிக்கா அணி 2 ஆவது இன்னிங்ஸை தொடங்கியது. 3 ஆவது நாள் மதிய உணவு இடைவேளை வரை தென்னாபிரிக்க அணி விக்கெட் இழப்பின்றி 39 ஓட்டங்களை எடுத்தது.

# ஆஸி - பாகிஸ்தான் இடையிலான 2 ஆவது டெஸ்ட்: அசார் அலி இரட்டை சதம்; வோர்னர் பதிலடி

மெல்போர்ன் டிசெ.29

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் மெல்போர்னில் இடம் பெற்றுவரும் டெஸ்டில் பாகிஸ்தான் வீரர் அசார் அலி இரட்டை சதம் அடித்து அசத்தியுள்ளார்.



இதேவேளை, தொடர்ந்து களமிறங்கிய வோர்னர் 144 ஓட்டங்களைக் குவித்து பதிலடி கொடுத்துள்ளார். ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் மெல்போர்ன் நகரில் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. முதல் இரண்டு நாள்களில் பெரும் பாலான நேரம் மழையி னால் பாதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் 6 விக்கெட் இழப்பிற்கு 310 ஓட்டங்களை எடுத்திருந்தது. அசார் அலி 139 ஓட்டங்களுடனும், மொகமது ஆமிர் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.


நேற்று இடம்பெற்ற 3 ஆவது நாள் ஆட்டத்தில் இருவரும் தொடர்ந்து ஆட்டத்தை தொடங்கினார். ஆமிர் மேலும் ஒரு ஓட்டத்தை எடுத்து 29 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து சோகைல் கான் அசார் அலியுடன் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி 9 ஆவது விக்கெட்டுக்கு 118 ஓட்டங்களைக் குவித்தது. சோகைல் கான் 65 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அசார் அலி சிறப்பாக விளையாடி இரட்டை சதம் அடித்தார். கடைசியாக வந்த வஹாப் ரியாஸ் 1ஓட்டத்தில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 443 ஓட்டங்களைக் குவித்து அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. அசார் அலி 205 ஓட்டங்களைச் சேர்த்து கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார். ஆஸ்திரேலியா அணியில் பேர்ட் மற்றும் ஹசில்வுட் ஆகியோர் அதிகபட்சமாக தலா மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

பின்னர் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸை தொடங்கியது. ரென்ஷா மற்றும் வோர்னர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ரென்ஷா 10 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ஆனால், வோர்னர் அதிரடியாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தார். 113 பந்துகளில் 13 பவுண்டரியுடன் சதம் அடித்த அவர் 143 பந்தில் 17 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 144 ஓட்டங்களைக் குவித்தார். இவரது அதிரடியால் ஆஸ்திரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 278 ஓட்டங்களைக் குவித்துள்ளது. கவாஜா 95 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் ஸ்மித் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

தற்போது வரை ஆஸ்திரேலியா 165 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. கைவசம் 8 விக்கெட்டுக்கள் உள்ளதால் இன்று அதிரடியாக விளையாடி 250ஓட்டங்கள் முன்னிலைப் பெற்றால் மெல்போர்ன் டெஸ்டில் முடிவு கிடைக்க வாய்ப்புள்ளது.

# ஆங்கிலேய பிறீமியர் லீக்; செல்சி கழகம் வெற்றி!



லண்டன், டிசெ.29

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் ஆங்கிலேய பிறீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டிகளில் செல்ஸி விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியாக 12 வெற்றிகளை ஈட்டி சாதனை நிலைநாட்டியுள்ளது.

போர்ன்மௌத் கழகத்திற்கு எதிராக கடந்த திங்களன்று நடைபெற்ற பிறீமியர் லீக் போட்டியில் 3 - 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியீட்டியதன் மூலம் இந்த சாதனையை செல்சி கழகம் படைத்தது.


இப் போட்டியில் ஒரு தட்டு, இரண்டு தட்டுகள் என்ற ப்ந்து பரிமாற்றங்களுடன் மிக வேகமாக விளையாடிய செல்சி கழகம் எதிரணியை மாத்திரமல்லாமல் இரசிகர்களையும் பிரமிக்க வைத்தது.

போட்டியின் 24 ஆவது நிமிடத்தில் பெட்ரோ முதலாவது கோலைப் புகுத்தி செல்சி அணியை முன்னிலையில் இட்டார்.


இடைவேளை முடிந்து போட்டி ஆரம்பித்த நான்காவது நிமிடத்தில் போர்ன் மௌத் வீரர் ஒருவர் தனது பெனால்டி எல்லையில் விதிகளுக்கு முரணாக விளையாடியதால் செல்சி அணிக்கு பெனால்டி ஒன்று வழங்கப்பட்டது.

அதனை ஈடன் ஹஸார்ட் இலக்கு தவறாமல் கோலினுள் புகுத்தியதால், 2 - 0 என செல்சி கழகம் முன்னிலை அடைந்தது.

போட்டி முடிவடைய சில செக்கன்கள் இருந்தபோது போர்ன்மௌன்ட் வீரர் ஸ்டீவன் குக் பந்தை தனது கோல் எல்லையிலிருந்து திசை திருப்ப முயன்ற போது பந்து அவரது சொந்த கோலினுள் செல்ல செல்சி கழகத்தின் 3 ஆவது கோல் இனாமாகக் கிடைத்தது.



# ஆஸி. பகிரங்க போட்டிகளிலிருந்து டெல் பொட்ரோ விலகினார்!



மெல்போர்ன், டிசெ.29

எதிர்வரும் ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடரின் ஒற்றையர் போட்டிகளிலிருந்து ஆர்ஜென்டீன வீரர் ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோ விலகியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க வீராங்கனை மெடிசன் கீஸ் ஏற்கனவே விலகுவதாக அறிவித்திருந்தார்.

ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோ உடற்திடநிலை தொடர்பான பிரச்சினைகளால் வாபஸ் பெற்றுள்ளார்.

இதேவேளை, மெடிசன் கீஸ், கையில் ஏற்பட்ட காயம் காரணமாக விலகியுள்ளார். 2016 மகளிர் ஒற்றையர் தரவரிசையில் மெடிசன் கீஸ் 8 ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலிய பகிரங்கத் தொடருக்கு முன்னதாக நியூஸிலாந்தில் நடைபெறவுள்ள ஒக்லண்ட் கிளஸிக் சுற்றுப் போட்டியிலிருந்தும் ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோ விலகியுள்ளார்.

காயம் காரணமாக ஒரு வருட காலம் போட்டிகளில் பங்குபற்றாமல் இருந்த ஜுவான் மார்ட்டின் டெல் பொட்ரோ இவ் வருட ஆரம்பத்தில் 42 ஆவது இடத்தில் இருந்தார்.

எனினும், ஸ்வான் வவ்ரின்கா, நொவாக் ஜோகோவிச், ரபாயெல் நடால், அன்டி மறே முதலான வீரர்களை தோற்கடித்த அவர், வருட இறுதியில் 38 ஆவது இடத்துக்கு முன்னேறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கறுப்புநிறத் துடுப்பை பயன்படுத்த அன்ட்றே ரசலுக்கு அனுமதி



மெல்போர்ன் டிசெ.29

கறுப்பு மற்றும் இளஞ் சிவப்பு நிறங்களைக் கொண்ட துடுப்பைப் பயன்படுத்த மேற்கிந்தியத் தீவுகள் வீரர் அன்ட்றே ரசலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் பிக் பாஷ் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வரும் அன்ட்றே ரசல் தான் பயன்படுத்திவரும் துடுப்பை வித்தியாசமாக மாற்றியமைத்தார். இந்தத் துடுப்பு வழமையான துடுப்புகளைவிட வித்தியாசமான நிறங்களைக் கொண்டது.

துடுப்பின் நடுப்பாகத்தின் கீழ் கறுப்பு நிறத்தையும் கைப்பிடி உட்பட மேற்பாகம் இளஞ் சிவப்பு நிறத்தையும் கொண்டதாக இந்தத் துடுப்பு அமைந்திருந்தது.

சிட்டி சிக்சர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சிட்னி தண்டர்ஸ் அணிக்காக விளையாடி வரும் ரசல் இந்தத் துடுப்பைப் பயன்படுத்தியிருந்தார்.

இந்த துடுப்பினால் பந்து அடிக்கப்படும்போது பந்தில் கறுப்பு புள்ளிகள் ஒட்ட ஆரம்பித்ததால் அந்தத் துடுப்பைப் பயன்படுத்த முடியாதவாறான தடையை ஆஸ்திரேலிய பிக் பாஷ் ஏற்பாட்டுக் குழு விதித்திருந்தது.

எனினும் கறுப்பு நிறம் உள்ள துடுப்பின் பகுதியில் லெமினேட் கவர் ஒன்றை அன்ட்றே ரசல் ஒட்டியதை அடுத்து அந்தத் துடுப்பை பயன்படுத்த ஆஸ்திரேலிய பிக் பேஷ் ஏற்பாட்டுக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

பிக் பாஷ் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் வீரர்கள் தங்களது அணியின் சீருடையில் உள்ள நிறங்களை உடைய துடுப்புகளைப் பயன்படுத்த முடியும் என பிக் பாஷ் ஏற்பாட்டுக்குழுவின் தலைவர் அன்தனி எவரார்ட் தற்போது தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு வேலை தேடுகிறார் ரஞ்சி சாதனை வீரர் சமித்

டில்லி, டிசெ.29

ரஞ்சி கிரிக்கெட்டில் புதிய சாதனை படைத்துள்ள குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சமித் கோஹெல் (வயது 26) விளையாட்டு ஒதுக்கீடு அடிப்படையில் அரசு வேலை தேடுவதாக கூறியுள்ளார்.

ரஞ்சி கிரிக்கெட்டில் 359 ஓட்டங்களைச் சேகரித்து புதிய சாதனை படைத்துள்ள குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர் சமித் கோஹெல் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனது தந்தை சிறிய அளவில் ரியல் எஸ்டேட் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார். அதில் வருமானம் பெரிய அளவில் இல்லை. இப்போது வரைக்கும் எனது ஒரே கவனம் கிரிக்கெட் மீது மட்டுமே உள்ளது. ஒரு பக்கம் அரசு வேலையும் தேடிக்கொண்டிருக்கிறேன். விளையாட்டு ஒதுக்கீடு அடிப்படையில் வருமான வரித்துறை மற்றும் தேனா வங்கியில் பணி கேட்டு விண்ணப்பித்துள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.



# அரசமைப்பு குழுவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்புக்கான 21 பேர் கொண்ட வழிகாட்டல் குழுவிலே கூட்டமைப்பு சார்பில் சம்பந்தன், சுமந்திரன் ஆகிய இரண்டு பேர் மட்டுமே அங்கம் வகிக்கின்ற நிலையில், அவர்கள் சமஷ்டி அமைப்பு முறை வேண்டுமென்றோ, வடக்கு - கிழக்கு இணைப்பு வேண்டுமென்றோ கோரிக்கை வைக்கவில்லை. அத்துடன் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு எதிர்க்கவுமில்லை. ஒற்றையாட்சியையும் ஏற்றுக் கொண்டுவிட்டனர் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

**தெற்கின் நிலைப்பாடு**

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது மத்திய குழுக் கூட்டத்தில் ஒற்றையாட்சியை மாற்றக் கூடாது, பௌத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும், வடக்கு - கிழக்கு இணைக்கப்படக்கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் தன்னுடைய உயர்மட்டக் கூட்டத்தில் இதே தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

ஜே.வி.பியும் வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது ஓர் இனவாதமான முடிவு, வடக்கும் தெற்கும்தான் இணைக்கப்படவேண்டும், ஆனால், வடக்கும் கிழக்கும் இணைக்கப்படத் தேவையில்லை, இதனை நாம் மிக ஆணித்தரமாக எதிர்ப்போம் என்று கூறியுள்ளது. அதேபோல சமஷ்டி என்பது தேவையில்லை என்றும் ஜே. வி. பி. மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய மூன்று கட்சிகளும் தமிழ் மக்கள் - அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - முன்வைத்த எந்தவொரு கோரிக்கையையும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம், ஆனால், நாம் ஓர் அரசியல் தீர்வுக்குத் தயாராகவுள்ளோம் என்று கூறிவிட்டன.

**ஏன் பேசவில்லை?**

இந்த அரசமைப்பு வழிகாட்டுதல் குழுவில் இருக்கின்ற சம்பந்தன் மற்றும் சுமந்திரன் தமிழர்களின் நிலைப்பாடு தொடர்பாக ஏன் அங்கு பேசவில்லை?

சம்பந்தன் மற்றும் சுமந்திரன் இருவருமே சட்டத்தரணிகள். மிக நன்றாக ஆங்கிலமும் தெரிந்தவர்கள். ஏன் இவர்கள் பேசாமல் இருக்கின்றனர்?

நாங்கள் ஒன்றையும் தமிழர்களுக்குக் கொடுக்கமாட்டோம் என்று ஜனாதிபதியும், பிரதமரும் கூட மிகத் தெளிவாகச் சொல்லி விட்டார்கள். அத்துடன் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் இது சம்பந்தமாக ஏதும் கேட்கவில்லை என்றும் கூறினர்.

தமிழ் மக்கள் சார்பிலே அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலே உள்ள இவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கேட்காவிட்டால் பிறகு அக்குழுவிலிருந்து கொண்டு என்ன செய்கிறார்கள்?

அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலே இவர்கள் பேசுவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சு ஒன்று நடைபெறவேண்டும். அப்பேச்சில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அரசமைப்புக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் பேசவில்லையென்றால் குறைந்தபட்சம் அதற்கு முன்பதாக ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் அடங்கிய இந்த அரசுடனாவது பேசி என்னென்ன விடயங்கள் அரசமைப்பில் உள்ளடங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அப்படி இவர்கள் அரசுடன் இவ்விடயம் தொடர்பாகப் பேசினார்கள் என்றும் எந்தவிதத் தகவலும் இல்லை.

லண்டனிலும், சிங்கப்பூரிலும், இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் சுமந்திரனும் மற்றும் வெளிநாட்டிலுள்ள சில தமிழர் அமைப்புக்களும் சேர்ந்து பேசியதாக சில காலத்துக்கு முன்பு ஒரு செய்தி வெளிவந்தது. அது பற்றி நாம் கேட்டபோது, அது இரகசியமான கூட்டம் என்று சுமந்திரனால் சொல்லப்பட்டது.

அங்கும் எவ்விடயம் கலந்தாலோசிக்கப்பட்டது என்பதும் யாருக்கும் தெரியாது.

**மாவை கூறுபவை**

அரசு ஏமாற்ற முயன்றால், அரசை முடக்கும் போராட்டம் என்று மறுபுறம் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். அப்படியாயின் இன்று நடந்து கொண்டிருக்கின்ற விடயம் என்ன? அரசு இப்போதும் தமிழ் மக்களை ஏமாற்றவில்லை என்று அவர் உணர்த்துகிறாரா?

ஆனால், யாழ்ப்பாணத்தில் வைத்து வடக்கு- கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை என்று சுமந்திரன் சொல்லியுள்ளார்.

இணைப்பு சாத்தியமில்லை என்றால் அது ஏமாற்றம் இல்லையா? சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி. ஆகிய கட்சிகள் ஒருமித்து வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை, ஒற்றையாட்சிதான், சமஷ்டி இல்லை என்று கூறுகிறார்கள். இப்படியாக அவர்கள் சொல்லுவது அத்தனையும் பொய்யா?

அப்படியாயின் நீங்கள் இதுவரையும் ஏமாற்றப்படவில்லையா?

**நமது கடிதம்**

அண்மையில் எனது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் சம்பந்தனுக்கு 5 நாள்களுக்கு முன்பாக ஒரு கடிதம் அனுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய ஒருங்கிணைப்புக் குழு உடனடியாகக் கூட்டப்பட்டு, எமது மக்களின் தற்போதைய பிரச்சினைகளுக்குரிய தீர்வு சம்பந்தமாகக் கலந்துரையாடப்படுவதோடு அதிலே ஒற்றையாட்சி, சமஷ்டி, பௌத்தத்துக்கு முன்னுரிமை, வடக்கு-கிழக்கு இணைப்பு போன்ற விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படவேண்டும் எனக் கோரப்பட்டிருந்தது.

ஆனால், சம்பந்தன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற ஒரு பத்திரிகைக்கு அப்படியொரு கடிதத்தை நான் பார்க்கவில்லையென்று குறிப்பிட்டுள்ளார். அத்தோடு எம்முடன் பேசுவதற்கு ஏனைய கட்சிகளுக்குத் தேவையிருந்தால் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பொருத்தமான நேரத்திலே பேச முடியும் என்றும் கூறியிருந்தார். அவரது பேச்சிலிருந்து அப்படியொரு தேவையில்லை எனவும் அவர் தெரிவிப்பதும் எமக்குப் புலப்படுகிறது.

ஆனால், பின்னர் சம்பந்தன் கொழும்புப் பத்திரிகைக்கு அப்படியொரு கடிதம் தமக்குக் கிடைத்தது என்று கூறியிருக்கிறார்.

சம்பந்தன் இந்தியாவில் நின்ற வேளையில் அவரது அலுவலகத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவர் இந்தியாவிலிருந்து வந்தவுடன் கடிதம் ஒப்படைக்கப்படும் என எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கடிதம் கிடைத்த பிற்பாடாவது அவர் கூட்டத்தை இதுவரை கூட்டவில்லை.

அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் ஆளும் கட்சியில் இருக்கக் கூடிய ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் அங்கத்தவர்களும், அமைச்சர்களும் தமிழர்களுக்கு மாறான நிலைப்பாட்டை திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அறிவித்துவிட்டனர்.

**வெளியேற்றுங்கள்!**

இப்படியாக அவர்கள் கூறிய தன் பிற்பாடு கூட்டமைப்பின் சார்பாக வழிகாட்டல் குழுவில் இரண்டு பேர் இருக்க வேண்டிய தேவை என்ன? முதலாவதாக கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் இந்தவழிகாட்டல்குழுவிலிருந்து வெளியேறி அரசுக்கு மிகத் தெளிவாகச் சொல்ல வேண்டும். எங்களுடைய அடிப்படைக் கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை உணர்த்த வேண்டும். குறைந்த பட்சம் அரசாங்கமும் நாங்களும் நேருக்கு நேர் பேசி ஒரு முடிவைக் கண்ட தன் பிற்பாடு மீண்டும் இந்த வழிகாட்டல் குழுவில் சேரலாம்.

அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் 40 கூட்டங்கள் நடைபெற்றுள்ள நிலையில் இந்தப் பிரச்சினைகள் பற்றி ஏன் இன்னும் பேசப்படவில்லை?

எதிர்வரும் 9, 10, 11 ஆம் திகதிகளில் உரிய விவாதம் நடைபெறவுள்ளது. இதுவரைக்கும் ஆறு உபகுழு அறிக்கைகள் வந்துள்ளன. அதனைத் தொடர்ந்து போன மாதம் 10ஆம் திகதி ஓர் அறிக்கை வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் வரவில்லை.

அந்த இடைக்கால அறிக்கை வந்திருந்தால் கூட அதில் என்னென்ன விடயங்கள் இருக்கின்றன என்று மக்களுக்குத் தெரிந்திருக்கும்.

இந்நிலையில், அந்த இடைக்கால அறிக்கை இல்லாமலே இந்த உப குழு அறிக்கையின் மீதே விவாதம் நடக்கப்போகிறதா? அல்லது கால அவகாசம் கொடுக்காமல் திடீரென இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றில் வைத்து விவாதம் நடக்கவுள்ளதா? - என்ற கேள்விகள் இப்பொழுது வந்துள்ளன.

**தெளிவான நிலைப்பாட்டை எட்டுவதற்கு ஒரே வழி**

இவ்விவாதத்துக்காக எதிர்வரும் மாதம் 9, 10, 11 ஆம் திகதிகள் என மூன்று நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால், இடைக்கால அறிக்கை ஒன்று வந்தாலும், அந்த இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி, பௌத்தத்துக்கு முதலிடம், வடக்கு-கிழக்கு இணைப்பு இல்லையென்றால் அதனை ஏற்றுக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விவாதத்துக்குப் போகுமா? ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் அவ்வாறு பேசப்போவது என்பது மிகப்பெரிய பாரிய விளைவை தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்துக்கு ஏற்படுத்தும்.

மாறாக, அவர்கள் அந்த வழிகாட்டல் குழுவிலே இருந்து விலகி வந்து, அரசாங்கத்துடன் திட்டவட்டமாக ஒரு பேச்சு நடத்த வேண்டும்.

அவ்வாறு பேச்சு நடத்துவதன் மூலம்தான் குறைந்தபட்சம் ஒரு திட்டவட்டமான - தெளிவான நிலைப்பாட்டை எட்டமுடியும்.

தமிழ்மக்களுக்கு எந்த விதத்திலும் பிரயோசனமற்ற இந்த அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலிருந்து விலகி சம்பந்தனும், சுமந்திரனும் அரசாங்கத்துடன் பேசுவது என்பது இப்போதைக்கு முக்கியமான விடயமாக உள்ளது.

தொடர்ந்து அந்த வழிகாட்டல் குழுவிலே இருப்பது எமது அடிப்படைக் கோரிக்கைகள் அனைத்தையும் மறுத்த அரசாங்கத்தை ஏற்றுக் கொண்டதாகத்தான் அமையும்.

**அரசைப் பாதுகாக்கும் முயற்சியா இது?**

1972, 1978 அரசமைப்புகளை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது எங்களுக்கு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலையில் சம்பந்தனும், சுமந்திரனும் அங்கு இருப்பது என்ன நோக்கத்துக்காக? இந்த அரசைப் பாதுகாப்பதற்காகவா என்ற கேள்வி எழுகிறது. இந்த அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு நிச்சயமாக இல்லை.

சிலநிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு இன்னும் ஒருவருட காலம் அவகாசம் வழங்குவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயார் என்ற பாணியில் சுமந்திரன் கூறியுள்ளார்.

இது, சுமந்திரனுடைய தனிப்பட்ட கருத்தே தவிர, இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடனோ அல்லது தமிழ்க் கூட்டமைப்பின் ஏனைய கட்சிகளுடனோ கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவல்ல.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையத்தில் 2015 மார்ச்சில் இலங்கை அரசாங்கத்தின் ஒப்புதலுடன் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை நடைமுறைப்படுத்துவதற்கு இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கப்பட்டது.

அந்த அவகாசம் 2017 மார்ச் மாதத்துடன் நிறைவடைகிறது. இந்த இரண்டு வருடத்தில் அரசு என்ன செய்திருக்கிறது?

**தீர்மானத்தில் கூறிய ஏதாவது நடந்ததா?**

அந்தத் தீர்மானத்தில் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும், முழுமையாக மக்கள் மீளக்குடியமர்த்தப்படல் வேண்டும், தேவைக்கு மேலதிகமான இராணுவம் குறைக்கப்படல் வேண்டும், காணாமற் போனோர் கண்டுபிடிக்கப்பட வேண்டும், இலங்கையில் நடைபெற்ற யுத்தங்கள் தொடர்பாக ஒரு விசாரணைக்கமிஷன் அமைக்கப்பட வேண்டும் என்று எல்லாம் கூறப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டத்தரணிகள் அழைக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்படிப் பல விடயங்கள்.

இந்தத் தீர்மானத்தில் காணாமற் போனோர் சம்பந்தமான அலுவலகம் அமைப்பதற்கான ஒரு சட்டமூலம் கொண்டு வரப்பட்டதைத் தவிர வேறு எதுவும் நடக்கவில்லை.

மக்கள் முழுமையாக இன்னும் மீளக்குடியேறவில்லை, இராணுவம் மக்களின் காணிகளை முழுமையாக் ஒப்படைக்கவில்லை, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, அரசாங்கம் தானாக ஐ.நாவுக்கு கொடுத்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. யுத்தக் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்கான குழுவும் இதுவரை அமைக்கப்படவில்லை. அது அமைக்கப்படுமா என்பதும் மிகப் பெரிய கேள்வியாகவுள்ளது. அது மாத்திரமில்லாமல், சர்வதேச நீதிபதிகளை அழைக்க மாட்டோமென்று திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அரசாங்கம் தெரிவித்துவிட்டது.

ஆகவே இவ்வாறான சூழ்நிலையில் இன்னும் ஒரு வருடத்தை நாங்கள் கொடுத்தல் என்பது எதற்காக?

ஆகவே இந்த அரசாங்கத்தை சர்வதேசத்திடமிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையாகத்தான் இந்த ஒரு வருட நீடிப்பு. இது சுமந்திரனால் தீட்டப்பட்ட திட்டமோ என எங்களுக்கு எண்ணத் தோன்றுகிறது.

**அரசுக்கு முட்டுக் கொடுக்கும் சுமந்திரனின் வேலை**

இலங்கை அரசாங்கத்தை முட்டுக்கொடுத்துப் பாதுகாத்து, சர்வதேச அழுத்தங்களிலிருந்து அவர்களை விடுவிக்கும் நடவடிக்கைகளைத்தான் சுமந்திரன் தொடர்ச்சியாக செய்து வருகிறார். இது எனது குற்றச்சாட்டு மாத்திரமல்ல; ஒட்டுமொத்த தமிழ் மக்களின் குற்றச்சாட்டாகவும் இப்பொழுது உள்ளது;

கால அவகாசம் வழங்கல் என்பது சுமந்திரனின் தனிப்பட்ட கருத்தாகவே அமையுமே தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு அல்ல. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் தமிழரசுக் கட்சியைச் சார்ந்த ஓரிருவர் மாத்திரம்தான் இந்த விடயங்களைக் கையாளுகிறார்களே தவிர கூட்டமைப்பு கையாள்வதாக நான் கருதவில்லை.

**இதுவா இராஜதந்திரம்?**

இந்த வகையிலே இவர்களுடைய இராஜதந்திரம் என்பது அரசமைப்பு வழிகாட்டல் குழுவில் சமஷ்டி இல்லாத ஒற்றையாட்சி முறை, வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை, பௌத்தத்துக்கு முன்னுரிமை போன்ற விடயங்களைப்பற்றிப்பேசாமல் மௌனமாக இருந்தமைதான்.

இதுதான் இவர்களின் இராஜதந்திரமா? அல்லது இப்பிரச்சினை தொடர்பாக இதுவரை காலமும் அரசாங்கத்துடன் பேசி ஒரு முடிவுக்கு வராமல் இருப்பதுதான் இராஜதந்திரமா?

வடக்கு - கிழக்கு இணைப்பு, இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலம்தான் வந்தது.

சம்பந்தன் ஒரு வருட காலமாக எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார். அத்துடன் இணைப்பைக் கொண்டு வருவதற்கு இந்தியாவும் உந்துசக்தியாக இருந்தது. எனவே சம்பந்தன் புதுடில்லிக்குச் சென்று வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஏன் பேச்சு நடத்தவில்லை? அவ்வாறு பேசாமல் இருப்பதும் ஓர் இராஜதந்திரமா?

ஓர் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஓர் அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சருக்குரிய அந்தஸ்து இருக்கிறது. இந்நிலையில் அவர் புதுடில்லி சென்று அங்குள்ள வெளிவிவகார அமைச்சரையோ, வெளி விவகார அதிகாரிகளையோ, பிரதமரையோ சந்தித்திருக்கமுடியும். இந்தச் சந்திப்புக்கள் நடைபெற்றிருந்தால் இந்த விடயங்களைத்

பக்கம் 20 »

காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவில் இருக்கும் அகதிகள் விரும்பினால் நாடு திரும்பலாம்

## மத்திய அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

தமது தாய் நாட்டுக்குத் திரும்பிச் செல்வதா இல்லையா என்பதனை இலங்கைத் தமிழ் அகதிகளே முடிவுசெய்ய வேண்டும் என்று இந்தியாவின் மத்திய அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் சென்னைக்கு அண்மையில்வடக்கில்அமைந்துள்ள குமுடிப்பூண்டியில், வர்தா என்ற பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் முகாமுக்குச் சென்ற வேளையிலேயேஅமைச்சர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

அகதிகள் இங்கு தொடர்ந்தும் வசிப்பதற்கு விரும்பினால் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

ஆயினும், இலங்கையில் தமிழ் மக்களின் சனத்தொகை வீழ்ச்சி அடையும் நிலையைத் தோற்றுவிக்கக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில், இலங்கை அகதிகள் 36,650 பேர் வசிக்கிறார்கள் என்று அமைச்சர் புள்ளி விவரங்களையும்வெளியிட்டார்.

## எதிரணி நிபந்தனை

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து பயணிப்பதற்கு ஒன்றிணைந்த எதிர்க் கட்சி நிபந்தனை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ள தேசிய அரசுக்கு ஒத்துழைப்பை வழங்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அரசிலிருந்து விலக வேண்டும் என நிபந்தனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்தவிபத்தில்35வயதுடைய சதீஸ் லோகநாதன் மற்றும் 21 வயதுடைய அதீஷ் பாலசுப்பிரமணியம் ஆகிய இரண்டு ஈழத் தமிழர்களே உயிரிழந்துள்ளனர்.

சதீஸ் லோகநாதன் தனது வாகனத்தின் கட்டுப்பாட்டை இழந்தமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர் தனது காரின் கட்டுப்பாட்டை இழக்கக் காரணம் என்ன என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மதுபாவனையோ, காலநிலை சூழலோ இந்தப் பாரிய விபத்துக்குக் காரணமாக இருக்க முடியாது என 'டர்ஹாம்' பிராந்திய பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்த இருவரின் கார்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை ஆய்வுசெய்யவேண்டும் என்றும் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை கனடாவின் பிரதானசெய்தித்தாள்கள்வெளியிட்டுள்ளன.

## அரசமைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் கூறியுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

உலக இலங்கையர் பேரவை என்ற சிங்கள அமைப்பின் பிரதிநிதிகள் சிலர் மகாநாயக்க தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் அஸ்கிரிய பீடத்தின் பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர், உலக இலங்கையர் பேரவையின் செயலாளர் நிஹால் மெண்டிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விமல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காகவே இவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இம்மாதம் 4ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டிருந்த போது, கண்டி தலதா மாளிகையில் சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்ததால் அவர் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாக முடியாது எனத் தெரிவித்திருந்தார்.

எனவே, அவரை நேற்றைய தினம் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. (உ)

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்த தகவலையடுத்து வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபர்தேசபந்துதென்னக்கோனின் வழிநடத்தலில் வவுனியா-மன்னார் வீதி பட்டானிச்சூர் புளியங்குளம் பகுதியில் நேற்று பி.ப 1 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சோதனைநடவடிக்கையின் போது 3 கிலோ 491கிராம் 'மாவா' எனப்படும் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், அதனை வைத்திருந்த நபரும் கைதுசெய்யப்பட்டார். (100)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

முதலில் அந்தத் தினத்தில் தேசிய துக்க தினம் அறிவிக்கலாமா என ஆராயப்பட்டதாக அறிய வந்தது.

எனினும் அன்றிரவு புது வருடப் பிறப்பு நிகழ்வுகளில் மக்கள் பங்குபற்றுகின்றமையால் நாளை 30 ஆம் திகதி தேசிய துக்க தினம் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் அந்த அறிவிப்பும் வாபஸ் பெறப்பட்டது.

மறைந்த பிரதமரின் குடும்பத்தவர்களின் கோரிக்கைப் படி தேசிய துக்க தின அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (உ)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால்மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மத்திய கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்துக்கு அமைய பரீட்சையில் சித்தி பெற்ற தரம் 3 அதிபர்களை மாகாணப் பாடசாலைகளில்அதிபர்களாக நியமிக்குமாறு வட மாகாண முதலமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார் எனக் கூறப்பட்டதால் பரீட்சையில் சித்தியடைந்த தரம் 3 அதிபர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இதன்படி சில பாடசாலைகளுக்கு புதிய தரம் 3 அதிபர்களை நியமிக்கவும் ஏனையவர்களை பிரதி மற்றும் உப அதிபர்களாக ஆளணி வெற்றிடமுள்ள பாடசாலைகளில்நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## நெல்லியடியில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என இரகசியத் தகவல் ஒன்று நேற்று மாலை நெல்லியடிப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மாலுசந்திப்பகுதியைச்சுற்றிவளைத்த பொலிஸார் பஸ்ஸில் பயணிப்பதற்கென சந்தேகத்துக்கிடமான பொதியுடன் நின்ற இளைஞர் ஒருவரைச் சோதனையிட்ட போதுஅவரிடமிருந்தஒருகிலோ கேரளக் கஞ்சா கண்டு பிடிக்கப்பட்டது எனநெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ. பிரியந்த தெரிவித்தார்.

இதனையடுத்து இளைஞரிடமிருந்த கேரளக் கஞ்சாவைக் கைப்பற்றிய பொலிஸார் சந்தேக நபரான புத்தளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய அந்த இளைஞரைக் கைது செய்தனர்.

வேறு நபர் ஒருவரிடமிருந்து மேற்படி கஞ்சாவைப் பெற்றுக் கொண்ட இந்த இளைஞர் அதனை மன்னாருக்குக் கடத்துவதற்கு இருந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நெல்லியடி பொலிஸ்பிரிவில் கஞ்சா கைப்பற்றப்பட்டமை இதுவே முதல்தடவையாகும். சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (உ-40)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடன் அரசுக்கு எந்தவிதமான இரகசிய உடன்படிக்கையும் இல்லைஎன்றும்அவர்குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அழுத்தங்களில் இருந்து மீள்வதற்கும், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்குடனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட அரசாங்கம் தீர்மானித்ததே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டு ஆட்சியைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை. அத்தோடு அதி உச்ச அதிகாரப் பகிர்வு என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைத் தோற்கடிப்பதே அரசின் நோக்கம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஐக்கிய தேசியக் கட்சி இரகசிய உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளது என கூட்டு எதிரணி தெரிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு கூறினார்.

## தொண்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாணத்தைச் சேர்ந்த நூற்றுக்கும்மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியான உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்ததுடன், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தையும் முற்றுகையிட்டனர்.

கடந்த பத்து வருடங்களுக்கும்மேலாகதொண்டர்ஆசிரியர்களாக 1000இற்கும் மேற்பட்டவர்கள் சேவையாற்றி வருகின்ற போதிலும் இதுவரை அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கு இந்த ஆண்டுக்குள் நிரந்தர நியமனம் பெற்றுத்தருவோம் என வட மாகாணஆளுநர்றெஜினோல்ட் குரே மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் உறுதியளித்திருந்த போதும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும்மேற்கொள்ளப்படவில்லை என வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமக்கான நிரந்தர நியமனத்தை உடனடியாக வழங்காத பட்சத்தில்தொடர்உணவுதவிர்ப்புப்போராட்டத்தைமேற்கொள்ளவுள்ளனர் என வடமாகாண தொண்டராசிரியர் சங்கத்தினர் தெரிவித்திருந்தனர்.

ஆனாலும், இதுவரை காலமும்நிரந்தரநியமனம்வழங்குவதற்கான அறிவித்தல்கள் வழங்கப்படாத நிலையில், தமக்கான நிரந்தர நியமனத்துக்கான திகதியை வழங்குமாறு வலியுறுத்தி நேற்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

ஜனவரி 4ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற போது தொண்டர் ஆசிரியர்களின் நியமனம்தொடர்பில் அவருடன்கலந்துரையாடுவதாகவடமாகாணஆளுநர்றெஜினோல்ட் குரே உறுதியளித்ததைத் தொடர்ந்து உணவு தவிர்ப்புப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது என வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் இ.ஜெயராஜ் தெரிவித்தார்.

## அரசமைப்புக் குழுவி...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகச் சொல்லியிருக்க முடியும். அந்த விடயங்கள் ஏன் சொல்லப்படவில்லை? ஏன் பேசப்படவில்லை?

புலம்பெயர் தமிழர்கள்சமஷ்டி தீர்வு வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளனர்.

இந்நிலையில் அந்நாடுகளின் தூதகரங்களுடன் பேசி எமது பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றை ஏற்படுத்த அழுத்தங்களைக் கொடுத்திருக்கலாம். அதற்காக இவர்கள் முயன்றார்களா?

இராஜதந்திர நடவடிக்கைகள் எதை நோக்கி நடைபெற்றுள்ளன? அல்லது இராஜதந்திர நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளனவா? நடைபெற்றிருந்தால் என்ன விடயங்கள் எங்கெங்கு பேசப்பட்டுள்ளன? அவ்வாறான நடவடிக்கைகளினால் என்ன அழுத்தங்கள் உருவாகியுள்ளன? இவைஎல்லாம்பாரிய கேள்விகளாக முன் வைக்கப்பட்டுள்ளன.

**தமிழரசுக்குள் குழப்பம்**

ஒருபுறம்மாவைசேனாதிராசா வடக்கு - கிழக்கு இணைப்பை விட்டுக்கொடுக்கமாட்டோம், ஒற்றையாட்சிக்குள் பிரச்சினையைத்தீர்க்கமுடியாதுஎன்கிறார். மறுபக்கம் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வடக்கு - கிழக்கு இணைப்பு இப்பொழுது சாத்தியமில்லை என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனோ எமது பிரச்சினைகள் சரியான நீதியில் தீர்க்கக்கூடிய நிலைமை வந்துள்ளது என்று கூறுகின்றார்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதிப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும்வேறுமாதிரிக் கூறுகின்றார்கள்.

இப்பொழுது கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி கூட ஒரே கருத்தில் உள்ளதா என்பது தெரியவில்லை. தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே வெவ்வேறு தொனியில் பேசுகின்றனர். உண்மையிலே அவர்கள் சொல்லுகின்ற செய்தி தமிழ் மக்களுக்கு என்ன?

அதாவது குறைந்தபட்சம்கூட்டமைப்பாக இல்லாவிட்டாலும் - தமிழரசுக் கட்சிக்காவது ஒருமித்த கருத்து உள்ளதா? ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் முரண்பட்ட கருத்துக்களையே சொல்லிக் கொண்டிருக்கின்றமையை எம்மால் பார்க்கக்கூடியதாக உள்ளது. இது மிகவும் இக்கட்டான காலமாகும்.

தமிழ் மக்கள் வாழ்வா, சாவா என்ற நிலையிலே உள்ள ஒரு முக்கியமான காலகட்டம் இது. இந்தக்காலகட்டத்தைஇப்போது மிக மோசமாக கையாள்வதற்கான காரணம் கூட்டமைப்பின் கூட்டங்கள் ஒழுங்குமுறையாக நடைபெறாமையும் சரியான முடிவுகள் எடுக்கப்படாமையும், சம்பந்தன், சுமந்திரனின் தான் தோன்றித்தனமான நடவடிக்கைகளுமேயாகும்.

ஆகவே இவர்கள் இந்த அரசமைப்பு வழிகாட்டல் குழுவிலிருந்துவிலகி, வெளியேவந்து, முதலில்அரசுடன்தமிழ்மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாகப் பேசி திட்டவட்டமானதீர்வுகளைஎட்டிஅதற்குப் பிற்பாடு இந்த வழிகாட்டல் குழுவுக்குப் போகலாம்.

இல்லையென்றால் இந்த அரசாங்கமும்எம்மைஏமாற்றியுள்ளது என்பதனை உலக நாடுகளுக்குச் சொல்லி எங்களது மக்கள் ஒரு முழுமையான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் என்ன எடுக்க வேண்டும் என்பதனைத் தீர்மானிக்க வேண்டும்.

அத்தகைய ஒரு கால கட்டத்துக்குவந்திருக்கிறோம்.-என்றார்.

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் (புத்தகக் கடல்)
மலிவு விற்பனையும்
புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பாடசாலை சீருடைத் துணிகள் என்பவற்றை ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல. 212, 214, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:021 222 5542, 021 567 1527, acdil@gmail.com

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2016 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.